# திராவிடநாடு

2
அணா



ப்ருனோ



# அத்தர் வியாபாரம்

**தம்பி,**

லெனின்கிராட் பல்கலைக் கழக மாணவர்களும், பேராசிரியர்களும், மதம் வேண்டும்! மதம் வேண்டும்! அற்புதமான இந்து மதம் எமக்கு வேண்டும்! என்று நெஞ்சு நெக்குருகக் கூறினர்—தெரியுமா உனக்கு!

உனக்குத் தெரியுமா என்று கேட்கிறேனே, எனக்கே தெரியாது — இப்போதுதான் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

லெனின்கிராட்—பெயரே இயல்பைக் கூறுவதாக இருக்கிறது—இலட்சியபுரி அது!

மதமெனும் பேய்பிடித்தாட்ட, செல்வவான்களின் செருக்கிலே சிக்கிச் சீரழிந்து, மூடத்தனத்தில் உழன்றுகிடந்த மக்களை, ரஸ்புடீன் எனும் பெரும் புரட்டன் ஆட்டிப் படைத்துவந்தான். தூணிலும் துரும்பிலும், கல்லறையிலும் கானுறு பாயும் காடுகளிலும், பிலங்களிலும் பிம்பங்களிலும், தேவனைக் கண்டனர்—கண் மூடிக்கிடந்த மக்கள்; காலடி வீழ்ந்து காணிக்கைக் கொட்டினர்—மத குருமார்களுக்கு! கபட வேடதாரிகளோ, கைகூடாக் காதலுக்கும் பிடிபடாக் கோட்டைக்கும், நவநிதி பெறுவதற்கும், 'நல்ல விளைவு கிடைப்பதற்கும்—எதற்கும் பிரார்த்தனை—ஆசி தாயத்து—மந்திரக் கயிறு—கவசம்—தருவர்—மக்கள் ஏமாற்றப்பட்டோம் என்று எண்ணினதில்லை, எம்மான் அருளை இவர் மூலம் பெற்றோம் என்றெண்ணிப் பூரித்தனர். வறுமை வாட்டும், குளிர் கொட்டும், குழந்தைகள் 'கோ' வெனக் கதறும், குமரிகள் உடலை விற்று உருமாறி உழல்வர், — கோயிலில் மணிகள் ஒலிக்கும், குருவின் பவனி கோலாகலமாக நடைபெறும், 'தர்மதாதா'க்கள் திருவிழா நடத்துவர், ஆசி அளித்திடும் அருளாளர்கள் அரண்மனை போன்ற மாளிகைளில், ஏராளமான எடுபிடிகளும், பொறுக்கி எடுக்கப்பட்ட பொற்கொடிகளும் புடைசூழ கொலு வீற்றிருப்பர்!

சுழற்கண்ணழகி ஒருவளைக் கண்டு, நெஞ்சம் நெகிழ்ந்து, பெருமூச்செறிந்து, அந்தக்கட்டழகி! கன்னல் மொழியாள்! மின்னல் இடையாள்! பேசும்பேரின்பம்! எனக்குக்கிட்ட மார்க்கமொன்று காட்டிட வேண்டும், மாதவம் செய்தவரே! மனிதகுலத்தை உய்விக்க வந்த மகானே! என்று இறைஞ்சி, பொன்னும் பொருளும் காலடியில் கொட்டி, கண்ணீர் சிந்தினால், மூவாசையைத் துறந்து, துறந்ததால் மூலத்தை உணர்ந்து 'மேலோன்' என்ற விருது பெற்ற 'குருமார்கள், காதற்கனியை அந்தக்கனவான் பெறுவதற்கான 'ஆசி' அருளுவார்!! கட்டணம், காரிகையின் அழகுக்குத் தக்கபடி! காளையைத் துளைத்திடும காமக் கணையின் கூர்மைக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்கும்!

ஏழை எளியோர்களை ஏறெடுத்துப் பாரார்போலும் இந்தக் 'குருமார்' என்று எண்ணிவிடாதே தம்பி! ஏழைக்கும் குருமார்களுக்கு இரையாகிடும் வாய்ப்பு கிடைத்திடும்.

"அம்மை நோய் ஐயனே! என் ஐந்தாண்டுப் பாலகனுக்கு. அருகே நெருங்கவே முடியவில்லை! அவன் போடும், 'ஐயோ—அம்மா'வைக் கேட்க முடியவில்லை! ஆவி துடித்திடும் நிலை!—என்று ஏழை அழுதபடி கூறுவான், அருளை விற்றிட அங்காடி வைத்திருந்த அதிசய மனிதர்கள், 'சக்திக்கேற்றபடி' காணிக்கை தரச் சொல்லுவர் — ஜெப மாலையால் புனிதப்படுத்தப் பட்ட ஆடை, அருளாலயத் தோட்டத்து மூலிகை, அபிஷேக நீர்—இப்படி ஏதேனும் தருவர்! இவ்வளவு எதற்கு! விளைச்சல் சரியாக இருப்பதற்காக, நிலத்தில், 'மந்திர நீர்' தெளித்திடும் கைங்கரியம் செய்யும் மகான்களும் இருந்தனர்!

அப்படிப்பட்ட நாட்டிலே, லெனின் பிறந்தார்—பாடுபட்டார் — வெற்றி பெற்றார்—அதனை எடுத்துக் காட்டவே அந்த எழில்நகருக்கு, லெனின் கிராடு என்று பெயர்!

கூனன், ஏறு நடையோனானான்! விழியற்றவன், கனல்கக்கும் கண்ணினனானான்! ஊமை, பேசினான்! கொடுமை ஒழிந்தது! புதுமை பூத்தது! புதுமுறை ஏற்பட்டது! மதத்தைக் காட்டி ஏய்த்த மாபாவிகளை, மக்களின் திரண்டெழுந்த சக்தி, மண்ணோடு மண்ணாக்கிற்று!

அத்தகைய லெனின் கிராடு நகரில், சாமான்யர்கள்கூட அல்ல, பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், மாணவர்களும், மதம் வேண்டும்! என்று இன்று கேட்கிறார்கள் என்று இந்தியக் குடிஅரசுத் தலைவருக்குத் துணை செய்பவராக விருது பெற்றுத் திகழும் வேதியர், வேத வேதாந்த வித்தகர், வியாகர்ணப் பண்டிதர், தத்துவாசிரியர், இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகிறார்!

"அப்படியா! ஆஹா! ஆண்டவன் கருணையே கருணை! நாத்திகம் நசித்ததா! நாதன் அருளை நாடுகின்றார்களா! ஈசன் பெருமையே பெருமை! ஈதன்றோ அருமை!—என்று ஆதீனங்களும் அருளாலய அதிபர்களும் மட்டுமல்ல, சுட்டசட்டியை ஏந்திப் பிழைத்திடு

(4—ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 16-10-55 [இதழ் 15

# இலங்கையும் மலேயாவும்

—

ஆட்களைத் தாக்கியும்

கடைகளுக்குள் புகுந்தும்

கொழும்பு நகரில், கோலாகலம் ஏற்பட்டதாம், இருதினங்களுக்கு முன்! சிங்களமும்—தமிழும், இலங்கையின் அரசியல் மொழியாக இருக்க வேண்டுமெனும் ஒரு கோரிக்கையை சிங்களச் சோதரர்கள், ஏற்க விரும்பவில்லையாம். விளைவே இந்நிகழ்ச்சிகள்!

இலங்கையில் வாழும் தமிழர்கள் ஏராளமாக இருக்கிறார்கள், எனவே தான், தமிழும் அரசியல் மொழியாக வேண்டும் என்று அங்குள்ளோர் கருதுகிறார்கள். இதற்கு அரசு வட்டாரங்களிலும், போதிய ஆதரவு இருப்பதாகவும் அறிகிறோம். இருந்தும் சிங்கள மக்களில், சிலர் சீறிக் கிளம்பியிருக்கிறார்கள்.

இந்தியல்ல, தமிழ்! இந்தியை இந்நாட்டில் வடவர் திணிக்க விரும்புவதற்கும், தமிழ் இலங்கையில் இடம் பெற வேண்டும் என்பதற்கும் வித்யாசங்கள் நிறைய உண்டு. வடவரைப் போல, புரியாத ஒரு மொழியைக் கொண்டுபோய், திணிக்க விரும்பவில்லை, தமிழர்கள்! தமிழ் நாட்டிலிருந்து சென்றோரின் தொகையும், அம்மொழி பேசுவோர் ஏராளமாக வாழ்வதாலும், தமக்கு நீதி வழங்குமாறு கேட்டு வருகிறார்கள், நேர்மையான இக்கோரிக்கையை சிங்களத் தோழர்கள், ஏன் எதிர்க்கிறார்கள் என்று விளங்கவில்லை — இதைச் சாக்காக வைத்து தமிழர்கள் மீதும், தமிழ் வியாபாரிகள் மீதும் பாய்வதால் என்ன இலாபம்?

மலேயாவிலிருந்து ஒரு செய்தி வருகிறது, "மலேயா பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழைக் கற்க விரும்புவோருக்கும் துரிதமாக வசதிகள் செய்து தரப்படும்" என்று சிங்கப்பூர் பிரதமர் மார்ஷல் தெரிவித்துள்ளார். அவரிடம் சிலர் கேட்டிருக்கின்றனர், இந்தியாவின் மொழி இந்தியாயிற்றே! — என்று. அதற்கு அவர், "இந்திக்கு இங்கென்னவேலை? இங்கேயிருப்போரில் பெரும்பாலோர் தமிழர்கள்தான்; வடக்கத்தியர்களல்ல. ஆகவே தமிழுக்குத்தான் நாம் இடமளிக்க வேண்டும்" என்றும் பதிலளித்திருக்கிறார்.

அதிக மக்கள் வாழும்போது, அவர் தம் மொழிக்கும் இடம் தந்து, ஆதரிக்கும் இந்தப் பெருங் குணத்தைப் பாராட்டுகிறோம். இதே பாதையில், இலங்கைவாழ் சிங்களவரும் சென்று, தமிழர்கள் தமது மொழியுடன் வாழ வழி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். தமிழ், யாரையும் தாழ்த்தாது! தமிழன், எவரையும் வீழ்த்தான்!!

★

# வேலியும் பயிரும்

—

உப்பு, புளி, மிளகாயில்லையே — பெரிய பெண்ணுக்குப் பாவாடை சட்டை தைக்கவேண்டுமே—சின்ன பையனுக்கு புத்தகங்கள் வாங்கப் பணம் தேவைப்படுகின்றதே—சேட்டிடம் வாங்கிய பணத்துக்கு வட்டி கொடுக்க என்னசெய்வது, என்கிற கவலை இல்லாத குடும்பங்கள், அதிகம் இருக்கமுடியாது. அதிலும், வாழ்வுக்கும் — 'தாழ்வு ஏற்பட்டுவிடுமோ' எனும் அச்சத்துக்குமிடையே தவித்துக் கொண்டிருக்கும் மத்யதரக் குடும்பங்களில், இதுபோன்ற கவலைகள், ஏராளம். எப்படியெப்படியோ! எந்தெந்த விதமாகவோ, கெஞ்சியோ, அழுதோ—பலவிதமான தேவைகளையும், பூர்த்திசெய்துகொள்ளவேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால்தான் போலீஸ் உத்யோகம் பார்க்கும் பொன்னுச்சாமி, தலையைச் சொறிகிறார்—தபால்கார சாமிநாதன் 'சார்' போடுகிறார் மணியார்டரைக் கொடுத்ததும் — தாசில்தார் ஆபீஸ் குமாஸ்தா கொஞ்சம் முணகுகிறார்—கலெக்டர் அலுவலகத்தில் காகிதத்தைப் பைசல் செய்ய 'கண்ஜாடை' காட்டப்படுகிறது—மராமத்து இலாகாவில், 'மாலைநேர சந்திப்புகள்' தேவைப்படுகிறது. மக்களுக்காகப் பணிபுரிவோர் இவர்கள் என்பதால், மக்களிடம் அததற்கும் தனித்தனியாக 'தொகை' பெறுவது கூடாது; அது இலஞ்சம் வாங்குவதாகும்; லஞ்சம் பெறுவது சட்ட விரோதம்; அவர்கள் தண்டிக்கப்படுவார்கள், என்று விதி இருக்கிறது. இந்த விதி முறைகள் சரியானபடி அமுல் நடக்கிறதா, என்று கண்காணிப்பதாகவும் அவ்வப்போது சர்க்கார் விடுக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன!

வறுமை, எத்தகைய ஊழலுக்கும் வித்திட்டுவிடுகிறதென்றாலும்; 'வறுமை, வறுமை' என்று சொல்லியபடியே ஊழலும், உருப்படாத செயல்களும் உருவாகி மலிவதை யாரும் விரும்பார். முழுதும் முடியாவிடினும்' ஓரளவுக்காவது அவைகள் தடுக்கப்படவேண்டும் என்றே, கருதுவர். அந்த வகையில், இலஞ்சலாவணம் சம்பந்தமாக, அரசினர் விழிப்புடனிருப்பதையும் அதிலீடுபடுவர்களை எச்சரிப்பதையும் நாம் வரவேற்கிறோம்.

ஆனால், இப்படி வறுமையுடன் போராடும் நிலையில், வாயற்றவர்களாகவும் சிறு உத்யோகங்களில் இருப்போரை மட்டும் எச்சரித்தும், தண்டித்தும் விடுவதால், குறைதீர்க்கப்பட்டுவிடும் என்று கருதப்படுவது, மிகமிகத் தவறு. அதனால் இன்னும் பல வேலையில்லாதவர்கள் அதிகரிப்பார்களேயொழிய, விரும்பத்தக்க விளைவு ஏற்படாது.

இதனை, நன்கு உணர்ந்ததால் போலும் முன்னாள் காங்கிரஸ் பிரமுகரான ஆச்சாரிய கிருபளானி மொழிந்துள்ளார்,

இலஞ்சம் வளரக் காரணம் கீழே இருப்பவர்கள் அல்ல.

உயர்ந்த இடத்திலிருப்போரால்தான் சகல வித ஊழலும் உற்பத்தியாகிறது.

உறவினருக்கு சலுகை-வேண்டியவர்களுக்கு பதவி உயர்வு எல்லாம் உயர்ந்த இடத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது.

'உயர்ந்த இடம்' என்பதையும் வெளிப்படையாகவே கிருபளானி எடுத்துச் சொல்கிறார். மந்திரிமார்கள்தான், அவர் குறிப்பிடும் உயர்ந்த இடத்திலிருப்போர். அங்கேயிருந்து ஊழல் முளைக்கிறது-முதலில் அதைக் கிள்ளி எறிய முனைந்துவிட்டால், படிப்படியாகச் சாக ஆரம்பித்துவிடும் என்கிறார். வேண்டியவர்களுக்குச் சலுகை உறவினர்களுக்குத் தாராளம் என்பவைகள் இருப்பதால்தான் பல அதிகாரிகளுக்கு என்ன தவறுசெய்தாலும் தப்பித்து விடலாம் என்கிற மனோதைரியம் ஏற்பட்டு விடகிறது! அதுதான் கிள்ளி யெறியப்பட வேண்டும், என்கிறார், கிருபளானி!! உயந்த இடத்திலிருப்போர் தாங்கள் உயர்ந்த இடத்திருக்கிறோம் எனும் காரணத்தால், எதையும் துணிவுடன் செய்யும் பக்குவம் பெற்று விடுவார்கள். இல்லையென்றால் கோடீஸ்வரரான டால்மியா ரூபாய் இரண்டு கோடியை ஏப்பம் விட முயன்றிருப்பாரா?

எனவே, இப்படி உயர்பதவிலிருப்போரானாலும்,உயர்ந்தஅந்தஸ்திலிருப்பவர்களென்றாலும் மக்களின் வரிப் பணத்துக்கு மோசம் செய்தாலும் சரி, சொந்த முறையில் அதிகாரத்தை

(15-ம் பக்கம் பார்க்க)

2-பக்கத் தொடர்ச்சி

வோரும், காவிகட்டியதால் வயிறு நிரம்பிற்று என்று எண்ணுவோரும், மொட்டைத் தலையரும், காவடிச் சாமியாடிகளும் கூடக் களிநடம் புரிவர்!

டாக்டர் இராதாகிருஷ்ணனே கூட, பெருமிதத்துடன் தான் பேசுகிறார்—பரோடாவில் இந்தத் திங்கள் பத்தாம் நாள்..

**லெனின் கிராடு பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், மாணவர்களையும், நான் என் வழிக்குக் கொண்டு வந்துவிட்டேன். வாதாடினர் திறமையாக—என் எதிர்வாதம் கேட்டுத் திடுக்கிட்டனர்! கடாவினர், நான் வீசிய பதில்களைக் கண்டு கவிழ்ந்தனர்! அப்பப்பா! என்னென்ன கேள்விகள், எத்தனை குறுக்குக் கேள்விகள்! இவ்வளவுக்குப் பிறகு, அவர்கள், ஆம்! ஆம்! தாங்கள் கூறும் மதத்தை நாங்களும் விரும்புகிறோம்—ஏற்றுக்கொள்ள இசைகிறோம் என்று கூறினர்—** என்கிறார்!

பாமர மக்காள்! பாமர மக்காள்! பண்டித ஜவஹர் ஏதேதோ நாடுகளில் பவனி வருகிறார், தலைவர்களைக் காணுகிறார், வெற்றிமாலை சூடுகிறார், என்றெல்லாம் பேசிக் கிடக்கிறீர்களே, நான் என்ன செய்திருக்கிறேன், எத்தகைய வெற்றி பெற்றிருக்கிறேன், எத்தகையவர்களை நம் வழிக்குத் திருப்பி இருக்கிறேன் என்பதை அறியாமற் கிடக்கிறீர்களே, கூறுகிறேன் கேண்மின், லெனின்கிராடு நகரப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும் மாணவர்களையும் நான் மதத்தை ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறேன்—மகத்தான வெற்றி அல்லவா, அகிலம் புகழத்தக்க வெற்றியல்லவா இது! லெனின் கிராடில் மதத்துக்கு இடம் கிடைக்கும்படி செய்துவிட்டேன்! மதம் மக்களுக்கு அபின் என்று எங்கு பேசப்பட்டதோ, அங்கு, மதம் தேவைதான்! எங்களுக்கும் மதம் வேண்டும்! என்று பேசச் செய்துவிட்டேன், இந்த மகத்தான வெற்றிபெற்றதும், சாமான்யமான முயற்சியால் அல்ல, மெத்தச் சிரமப்பட்டு, விளக்கமளித்து, தர்க்கம் நடத்தி, கேள்விக் கணைகளைத் தூளாக்கி, சந்தேகத்தைத் துடைத்து, பிறகு வெற்றி பெற்றேன்!—என்ற கருத்துப்பட டாக்டர் இராதாகிருஷ்ணன் பேசியிருக்கிறார்.

தம்பி, என்ன சொன்னதால், இந்த 'வெற்றி' கிடைத்தது தெரியுமா! அதைத் தெரிந்துகொள்ள, ஒரு சிறுகதை, கூறுகிறேன் கேள்.

யாருக்கும் அடங்காத, எவரையும் எதிர்க்கும் முரடன் ஒருவன் இருந்தானாம் ஒரு ஊரில்! (ஊருக்கு ஒரு முரடன் போதுமல்லவா!) எதிரே யார் வந்தாலும், கன்னத்தில் ஒரு அறை கொடுப்பானாம், பற்கள் முப்பத்து இரண்டும் பொல பொலவெனக் கீழே உதிர்ந்து போகுமாம். அப்படிப் பட்டவனிடம், அந்த ஊரிலேயே, 'தொடைநடுங்கி' என்று யாவராலும் எள்ளி நகையாடப்பட்டு வந்த ஒருவன், சென்றானும்—சவாலுக்கு! ஒருநாள்! ஊரே அதிசயப்பட்டது! ஒருமணி நேரத்துக்கெல்லாம், வெற்றி! வெற்றி! என்று கூவியபடி ஊருக்குள் வந்தான். வந்தவனை ஊரார் சூழ்ந்து கொண்டு என்ன சேதி! என்ன சேதி! என்று ஆவலோடு விசாரித்தனர். அவன் பெருமையாக என்னை அவன் அடிக்கவில்லை! என் பற்களை உதிர்க்கவில்லை! என்று சொன்னானும்!

"எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கன்னத்தில் அடித்து பற்களை உதிரச்செய்பவன், உன்னைமட்டும், சும்மாவிட்ட காரணம் என்ன?" ஊரார் கேட்கிறார்கள்!

"காரணமா? என்சாமர்த்தியம் தான்!" என்றான் தொடை நடுங்கி.

"என்ன நடந்தது? எப்படி அவனைச் சமாளித்தாய்? விவரமாகச் சொல்லு" என்று கேட்டனர் ஊர் மக்கள். அவன் சொன்னான்.

"நேராக அவனிடம் சென்றேன் கன்னத்தில் அடிக்க கையை ஓங்கினான்! நிறுத்து! நிறுத்து! உன்னால் என்னை அடித்து, என் பற்களை உதிர்க்க முடியாது என்றேன். என்ன சொன்னாய்! என்ன சொன்னாய்! என்று அவன் கொக்கரித்தான். நீ கொக்கரித்து என்ன பலன்? நிச்சயமாகச் சொல்கிறேன் உன்னாலே, என் பற்கள் உதிரும்படி அடிக்க முடியாது! பந்தயம் கட்டுகிறேன் என்றேன். அவனுக்குப் பிரமாதமான கோபம், அடே அற்பப் பயலே! சுருள் கத்தி சுப்பன், அரிவாள் கந்தன், சம்மட்டி சதாசிவம், போன்ற சூரனெல்லாம் என் 'அறை' பட்டதால், 'பொக்கை' வாயர்களாகிப் போனார்கள்! நீ சுண்டைக்காய்! என் முன்னாலே சூரத்தனமா பேசுகிறாய்! என்று மிரட்டினான், கண்களை உருட்டினான், நான்; அப்பா நீ அசகாயச் சூரனாக இருக்கலாம்! நீ கொடுத்த அறையிலே, வீராதி வீரனுக்கெல்லாம் பல் போயிருக்கலாம், ஆனால், என்னை அறைந்து என் பற்களை உதிரச் செய்ய மட்டும் உன்னாலே முடியாது; இது உறுதி—என்ன பந்தயம்வேண்டுமானாலும் கட்டுகிறேன் என்றேன், அவனுக்குத் தலைகால் தெரியாத கோபம் வந்துவிட்டது— "ஆஹா! பந்தயமா! உன் பற்களை என்னால் உதிர்க்க முடியாமல் போனால், இனி ஒருவனையும் நான் கன்னத்தில் அடிப்பதில்லை!—என்றான். சத்தியமாகவா என்றேன், ஆமாம், என்று கூறிவிட்டு கையை ஓங்கினான், உடனே நான் ,நிறுத்து! நிறுத்து! என்று கூறியப்படி, என் வாயைத் திறந்து காட்டினேன்! பயல் கல்லாகிப் போனான்! ஏன் தெரியுமா! என் வாயிலே ஒரு பல் கூடக் கிடையாது! எனக்குத்தான் பற்கள் இல்லையே! என்ன செய்வான்! தோற்றுவிட்டான்! அட பாவிப் பயலே! இந்தச் சூது தெரியாமல் போய்விட்டதே! எங்கே உன்னுடைய பற்கள்? என்று கேட்டான்; பற்களை உதிரச் செய்யும் சூரப்புலி நீ ஒருவன்தானா, நேற்றிரவே, என் பற்களை உதிர்த்து விட்டாள், என் மனைவி, என்றேன். உண்மையும் அதுதான். அவன 'இடி இடி' எனச் சிரித்து விட்டு, பல்லே இல்லாதபோது, பல்லை எப்படி உடைக்க முடியும். பயலே, நீ கெட்டிக்காரன்தான், என்று என்னைப் பாராட்டினான்.

இது அவன் சொன்ன கதை. கேட்ட ஊர் மக்களும் கை கொட்டிச் சிரித்தனர். ஏற்கனவே மனைவி கொடுத்த அறையால் பல்லை இழந்துவிட்ட காரணத்தால், அறை கொடுத்துப் பற்களை உதிரச் செய்யும் முரடனை அவனால் 'ஜெயித்திட' முடிந்தது. அதுபோல டாக்டர் ராதாகிருஷ்ணன், லெனின் கிராடு, பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடமும், மாணவர்களிடமும் நடந்து கொண்டதால், 'வெற்றி' கிடைத்திருக்கிறது.

புதிய அறிவின் காரணமாக, மதத்திலே எந்தெந்த ஆபாசங்கள்

(16-ம் பக்கம் பார்க்க)

# எட்டு நாட்கள்

ஐரோப்பா முழுவதும் அந்த நாட்களில் அரிஸ்டாடில் தந்த கொள்கைகள் ஆட்சிபுரிந்து வந்தன—எல்லாத் துறைகளிலும்—சிறப்பாக மார்க்கத்துறையில்.

கிரேக்கநாடு தந்த அந்த அறிவுக் கருவூலம், அவர் காலத்தில், அவருக்கு இந்த வசதிகளுக்கு ஏற்ற வகையில், அவர் காலத்துச் சுற்றுச்சார்பின் படி ஆராய்ந்து, அறிந்த உண்மைகளை வெளியிட்டார்—அவை உலகு உள்ளளவும் மாற்றப்பட முடியாதன, என்று அல்ல!

ஆனால், அந்தக் கொள்கைகளை ஏற்று, அவைகளின் படி, அரசியல், பொருளியல், மத இயல் அமைப்புகளை, ஐரோப்பாவில் பல்வேறு நாடுகளில் ஏற்படுத்திக் கொண்டனர்—பழக்கத்தில் வந்துவிட்டது—அதனால், அது இறுகியும்விட்டது.

மனிதனுடைய சிந்தனாசக்தியை, அரிஸ்டாடிலின் தத்துவங்களுடன் பிணைத்துவிட்டனர்; அதற்கு மேலால் செல்வதோ, முரணாகச் சொல்வதோ, கேடுபயக்கும், என்றனர்; செல்பவர் தண்டனைக்கு உள்ளாவர் என்றும் சில இடங்களில் சட்டம் இயற்றினர்.

விண்ணிலே சிறகடித்துச் செல்லும் பறவை, எங்கும் சென்று, இன்புறும்.

கட்டிவிடப்பட்ட 'பட்டம்', நூலும் அதைச் செலுத்துவோனின் திறமும் அனுமதிக்கும் அளவுதான் செல்லும்.

அரிஸ்ட்டாடில் தந்த கருத்துத்தான், முடிந்த முடிவு, என்று ஐரோப்பா கூறிற்று.

அவர், விண், மண், கடல், என்பவை குறித்துக் கூறிவைத்த கருத்துக்களை ஆராய்வதும் ஆபத்தானது என்று கருதப்பட்டது.

சூரியன் சுற்றித்திரியும் கோளம்; பூமி நிலைத்து நிற்பது; என்பது அரிஸ்டாடில் அளித்த கொள்கை.

இதன்படியே, ஏடுகள், குறிப்பாக மத ஏடுகள், தீட்டப்பட்டுவிட்டன.

விண்ணுலகம், ஆங்கே விசாரணைக்கூடம்; நரகம், அங்கு வேதனைக்கூடம்; எனும் மதக்கருத்து, அசையாதிருக்கும் பூமி, அன்றாடம் சுற்றிவரும் சூரியன், என்ற அடிப்படையின்மீது கட்டப்பட்டது.

இந்த அடிப்படையைச் சந்தேகிப்பது பாவம், என்று கூறுவதில் மதவாதிகள் முனைந்தனர்; ஏனெனில் ஆராய்ச்சியாளர்கள் இந்த அடிப்படையை அலசத் தொடங்கினர்.

ப்ரூனோ சிறுவனாக இருந்தபோதே, வெடிகுண்டு வீசப்பட்டுவிட்டது.

வேதநிந்தகன் கிளம்பிவிட்டான்!

கோபர்னிகஸ் எனும் ஆராய்ச்சியாளன், பூமி உருண்டை வடிவுடன் இருக்கிறது, அது சுற்றித்திரிகிறது, சூரியன் நிலைத்து நிற்கும் கோளம், என்று ஏடு தீட்டிவிட்டான். மதவாதிகள் பாய்வர் என்ற அச்சத்தால், கோபர்னிகஸ், அந்த ஏடு, தீட்டியும் வெளியே காட்டாது வைத்திருந்து, மரணப் படுக்கையில் இருக்கும்போதுதான் அந்த ஏட்டை வெளியிட ஏற்பாடுசெய்தான். கோபர்னிகஸ் கொள்கை கேட்டு, வைதீக உலகு சீறிக் கிளம்பிற்று; இது பொய்க் கொள்கை, பேய்க்கொள்கை; பூமியாவது சுற்றுவதாவது: மேலே விண்; இங்கே மண்; இதனடியில் நரகம்; புண்யம், பாவம் இரண்டிலே எதைச்செய்யவும் மண்; புண்ணியம் செய்தால் விண்ணுலகு செல்லலாம்; பாவம் புரிவோர் நரகம் சேர்வர்; என்று முழக்கினர்.

பூமி உருண்டையாய் இருந்தால் என்ன, தட்டையாக இருந்தால் என்ன, சுற்றிவந்தாலென்ன சும்மாகிடந்தாலென்ன, என்று மத அதிபர்கள் எண்ணிக்கிடப்பதற்கில்லை; ஏனெனில், கோபர்னிகசின் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொண்டால், புனித ஏடுகளின் அடிப்படையே தகர்ந்துவிடுகிறது — பிறகு, அந்த ஏடுகளின் துணை கொண்டு கட்டப்பட்ட அமைப்பு என்ன கதியாவது—அந்த அமைப்பின் பயனாகக் கிடைத்துள்ள கோலாகல வாழ்வு என்ன ஆவது—இது அவர்கள் கவலை, பயம்! எனவே, தங்கள் ஆதிக்கத்தை ஏவி, கோபர்னிகசின் கொள்கையை அழித்தொழிக்க முனைந்தனர். ப்ரூனோ, கோபர்னிகசின் கொள்கையைச் சரியானது என்று கற்றறிந்தார், சிந்தித்துத் தெளிவும் உறுதியும் பெற்றார். இந்த அடிப்படை மாற்றம் அவருக்கு ஏற்பட்டான பிறகு, எந்த மத அமைப்புத்தான் அவரை ஆட்கொள்ள முடியும்!

கோபர்னிகஸ், ஆராய்ந்து அறிந்த புது உண்மை கூட, முழுவதும் புதிதல்ல. கிரேக்க நாட்டுப் பேரறிஞர் பிதாகோராஸ் என்பவர், இதனை முன்பே கூறிஇருந்தார்; ஆனால் அரிஸ்டாடில் கொள்கை, அதனை இருட்டடிப்பில் வைத்துவிட்டது. கோபர்னிகசின் கொள்கை, இதைப் புதுப்பித்தது; புயல் என்றனர் மதவாதிகள்—மத அடிப்படையில் கற்றவர் அனைவரும், இது கவைக்குதவாத கொள்கை என்றனர். ஆனால் கோபர்னிகஸ் வெற்றி பெற்ற வண்ணமிருந்தார். ப்ரூனோ, மடாலயத்தில் பயிலும்போதே இந்தக் கொள்கையை ஐயந்திரிபற உணர்ந்தார். ஆனஸலம் பாதிரியார் "மகனே! ஏன் இந்த கோபர்னிகசைக் கட்டி அழுகிறாய், அறிய வேண்டியதை அரிஸ்டாடில்அளித்துவிட்டார். அதுபோதும்.ஐயன் பெருமைகளைப் படி" என்று கூறிவந்தார். இளம் உள்ளம், கோபர்னிகசின்பால் லயித்துவிட்டது. பன்முறை கண்டித்திருக்கிறார் ஆன்ஸ்லம்.

சி.என்.அண்ணாத்துரை

"உலகம் உருண்டை என்கிறாயே, மகனே! அப்படியானால், நரகம் எங்கே இருக்கிறது? புனித ஏடு படித்திருக்கிறாயே, கூறு, நரகம், உன் உருண்டை உலகிலே எங்கேயடா இருக்கும்" என்று கேட்பார்

ஆன்ஸலம். ப்ரூனே சிரித்துக்கொண்டே, "எங்கே இருக்கும்? நீங்களல்லவா கூறவேண்டும்" என்று மடக்குவான். அவர் காதைப் பொத்திக்கொள்வார்! அவரும் அவர் போன்றுரும், விண்ணகத்திலே, ஒளிவிடும் சிம்மாசனத்தில் ஐயன் வீற்றிருக்கிருர், அங்கு விசாரணை நடைபெறும் என்ற எண்ணம் கொண்டவர்கள். ப்ரூனேவின் கவலை விசாரணை எப்படி இருக்கும், எப்போது நடைபெறும் என்பதுகூட அல்ல, சுற்ருத சூரியனைச் சுற்றுவதாகவும், சுற்றும் பூமியைப் பாய்போல் கிடப்பதாகவும், ஆராய்ச்சிக்கு ஒவ்வாத முறையிலே நம்புகிருர்களே, இது ஏன் என்பதாகும். இதிலிருந்து துவங்கிய அறிவு விசாரணை, ப்ரூனேவை நெடுந்தூரத்துக்கு அழைத்துச் சென்றது.

மனிதன் பாவத்தோடு பிறக்கிருன்—அவனைப் பாவம் புரியும்படி தீயதேவன் சதா தூண்டுகிருன்—அவனுடைய தூண்டுதலிலிருந்து மீளவும், கர்த்தரின் கிருபையைப் பெறவும் தொழுகை நடத்தவேண்டும்—முறை நாங்கள் கூறுகிருேம்—இடம் நாங்கள் காட்டுகிருேம்—நேரம் நாங்கள் குறிக்கிருேம் — காணிக்கை எமக்குத் தாருங்கள் என்றனர் மத அதிபர்கள்—கேட்கும் முறை, பெறும் காணிக்கை, வகுத்திருக்கும் சடங்கு இவைகள் பற்றி, ஊதரும் பிறரும் ஆராய்ந்தனர்—ப்ரூனே, இவைபற்றி அல்ல, மனிதன், ஈடேற, தூய்மைபெற, அவனுலேயே முடியும், தக்கபடி முயன்ருல், என்பதுபற்றி ஆராய்ந்தார்.

கோளங்கள் பற்றியும், ஒழுக்கமுறை பற்றியும், ப்ரூனே தீட்டிய மூன்று அரிய ஏடுகள், பழைய கோட்பாட்டைத் தகர்த்தெறிவனவாக அமைந்தன.

கலத்தில் இருப்போன்தான் அலையையும் சுழலையும் சமாளித்துக் கலத்தைச் செலுத்தவேண்டுமே தவிர, இக்கரையிலோ அக்கரையிலோ இருந்துகொண்டு ஒருவன் கலத்தைச் செலுத்துவான் என்று எங்ஙனம் கூறமுடியும் -மனிதனும் அதுபோன்றே, தன் சிந்தனையையும் செயலையும் அவனேதான் செலுத்திச் செல்லவேண்டும், அதற்காக வேறு ஒருவரை நியமித்துக்கொள்வது பொருளற்றது, எனவே பயனற்றது என்று ப்ரூனே வாதிட்டார்.

தூய்மையான சிந்தனை, செம்மையான செயலைச் செய்யும் முயற்சி — இவை மனிதனை ஈடேறச்செய்யும் என்று ப்ரூனே கூறினுர்.

மதவாதிகள், மனிதனுக்குப் 'போலிஸ்' வேலை செய்தனர்—ப்ரூனே 'தோழமை' பேசினுன். மனிதன் இயல்பால் கெட்டவனுமல்ல, பாபியுமல்ல, அவனிடம் 'தெய்வீகம்' இருக்கத்தான் செய்கிறது; அதனை அறிந்திட, தன்னைத்தான் உணர்தல் வேண்டும்; தன்னை அறிந்து இன்புற்று, தக்கன தகாதன என்ற பாகுபாடு பெற்று, பாடு அறிந்து ஒழுகுதல் வேண்டும்—மனிதன், கயமை, தூய்மை எனும் இரு கடல்களுக்கிடையே தவிக்கும் கலம், நாங்களே மீகான்கள் என்று கூறும் மதவாதிகள் போலின்றி, ப்ரூனே, மனிதன் மேம்பாடடைய முடியும், சுய முயற்சியால், என்று நம்பினுன். இதனை எப்படி, தொழுகை ஸ்தலங்களை நம்பி வாழ்வோர், பொறுத்துக்கொள்ளமுடியும். பகை மூண்டது. ப்ரூனே அஞ்சவில்லை.

சுவிட்சர்லந்து விரட்டினுல், பிரான்சு, அங்கு எதிர்ப்பு வெப்பமானுல், இங்கிலாந்து, அங்கும் பகைமூண்டால், ஜெர்மனி, இவ்வண்ணம், ஓடியவண்ணம் இருந்தார்—எந்த இடம் தங்குமிடம் ஆனபோதிலும், கோபர்னிகஸ் கொள்கையை வலியுறுத்துவார்.

இங்கிலாந்து நாட்டிலே ப்ரூனே தங்கி இருந்தபோது, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், அறிவு வளர்ச்சி விழா நடைபெற்றது; பல்வேறு நாட்டு அறிஞர்கள் கலந்துகொண்டனர்; ப்ரூனே, அங்கு, கோபர்னிகஸ் கொள்கையை வாதாடினுர், குதூகலம் கொதிப்பாக மாறிவிட்டது — சுட்டிக் காட்டிச் சுடுசொல் கூறலாயினர் மக்கள்.

"போகிருன் பார் நாத்திகன்!"

"உலகம் சுற்றுகிறது என்கிருன் இந்த உலுத்தன்"

"சூரியன் சுற்ருதாம்—மேதாவி கூறுகிருன்" என்று ஏளனம் செய்வர்—மிரட்டுவர்.

இங்கிலாந்திலும் வெப்பம் அதிகமாகிவிட்டது.

ஜெர்மெனியிலிருந்த விர்ட்டன்பர்க் பல்கலைக் கழகத்தில், ப்ரூனேவுக்கு, நிம்மதி அளிக்கும் வாழ்வு கிடைத்தது; தத்துவப் பேராசிரியாகப் பணியாற்றினுர்—அவருடைய கொள்கைக்காக வெறுத்து விரட்டவில்லை; அவர் கண்ட ஆராய்ச்சி உண்மையை அவர் எடுத்துரைக்கட்டும், அது அவர் உரிமை, என்று பெருந்தன்மையுடனும், தாராளத் தன்மையுடனும் விர்ட்டன்பர்க் பல்கலைக் கழகத்தினர் நடந்துகொண்டனர்.

நிம்மதி, ப்ரூனேவுக்குச் சில காலமே பிடித்தது; பிறகோ அவருக்குப் போரிடவேண்டும், என்ற எண்ணம் துளைத்தது. கொள்கையை, மறுப்போரிருக்கும் இடத்திலெல்லாம் சென்று பரப்புதல்வேண்டும்; அறிவுப்போர் வாழ்வின் குறிக்கோள், என்று கருதினுர். போர்வீரன், மனம் களம் காணுது, கழனியில் கதிரின் அழகுகண்டு காலந்தள்ளுவதற்கு ஒருப்படுமோ! திறம்வந்த நாள் முதல் போரிட்டே பழக்கமாகிவிட்டது.

ப்ரூனே, மடாலயத்தில் சேருவதற்கு முன்பு, தாயும், சிற்றப்பாவும், ப்ரூனேவை, போர் வீரனுக்கவே விரும்பினுர்கள். ப்ரூனேவேதான், அறிவுபெற மடாலயம் செல்வேன், என்று கூறினுன். மக்களை மக்கள் காரண மற்றுக் கொன்று குவிக்கும் போர் முறையை, சிறுவன் ப்ரூனே, தாயிடம் கண்டித்து, வெறுத்துப் பேசினுன். "எவனேசோம்பேறிச் சீமான் சண்டையிடச் சொல்வான், அவனுக்காக, என்போன்ற ஏழையைக் கொல்ல நான் செல்ல வேண்டுமா," என்று கேட்டான்; தாயின் உள்ளம் மகனுடைய நேர்மையும் ஈரமும் கொண்ட உள்ளத்தைக் கண்டு பூரித்துப்போயிருக்கும்! அவள் என்ன கண்டாள், பாபம், ப்ரூனே, வேருேர் பயங்கரப் போருக்குச் செல்வான் என்பதை.

போர் உள்ளம் கொண்ட ப்ரூனே, நிம்மதிதந்த விர்ட்டன்பர்க்கைவிட்டு, பிராங்பர்ட், பதுவா, போன்ற இடங்கள் சென்ருன்.

யார் செய்த சூழ்ச்சியோ, இதுநாள் வரை, ரோம் நகர மத அதிபர் பிடியில் சிக்காது இருந்து வந்த ப்ரூனேவை, ஆபத்தில் கொண்டுவந்து சேர்த்தது.

ப்ரூனேவுக்கு எப்போதும், சிறுவயது முதலே தாயகத்தினிடம் அளவற்ற பற்று. எந்த நாட்டிலே உலவினுலும், இத்தாலியைப் பற்றிய எண்ணம் மனதில் கனிந்து நிற்கும். நீலநிற வானமுள்ள என் இத்தாலி எங்கே, இந்த வண்ணமற்ற வானம் தெரியும் நாடு எங்கே! என்று ஏங்கிக் கூறிக்கொள்வான். மடாலயத்திலிருந்து, தப்பி ஓடியபோது, சுவிட்சர்லாந்து நாட்டு எல்லையருகே நின்று, இத்தாலியைவிட்டு பிரிகிருேமே, மீண்டும் இங்கு வருவோமா, எனக்குத் தொட்டில் தந்த இத்தாலி, கல்லறைதான் தர இருக்கிறதா, இங்கு நான் வாழ இடமில்லையா, தாயகமே! பேயகமாக மாற்றப்பட்டு விட்டாயே என்றெல்லாம் எண்ணிக் கசிந்துருகினுன் ப்ரூனே. போர் உள்ளமும், தாயகப் பற்றும், ப்ரூனேவை, சதிகாரனிடம் சிக்கவைத்தது.

ரோம்நாட்டு மத அதிபர்கள், தமது எதிரிகளை, கண்ணிவைத்துப் பிடிப்பதில் கைதேர்ந்தவர்கள். லூதருக்கும் அவர்கள் வலைவைத்தனர்—ஆனுல் அவருக்குத்

துணையாக மன்னர் சிலரும் மக்கள் பலரும் திரண்டு நின்றதாலும், அன்றைய அரசியல் நிலை மாற்றங்கள் அவருக்குச் சாதகமளித்ததாலும், அவர் தப்பித்துக் கொண்டார். ரோம் மத அதிபரின் ஆதிக்கத்தை அழிக்கும் பிராடெஸ்டென்டு புயல்கிளம்பிய நாள் தொட்டு, மோப்பம் பிடித்துச் செல்லும் வேட்டை நாய்கள்போன்ற ஒற்றர்கள் பல்வேறு நாடுகளிலும் சுற்றிய வண்ணம் இருந்தனர். அவர்களுக்கு, ப்ரூனோவின் நடவடிக்கைகள் யாவும் நன்கு தெரியும். இத்தாலிய மண்ணிலே, ப்ரூனோ கால்வைத்ததும் கவ்விக்கொள்ளக் காத்துக்கிடந்தனர். பகைமூண்ட இடங்களிலேயே ப்ரூனோ, நீண்டகாலம் தங்கி இருந்திருந்தாலும் அவனை ஒழிக்க வழிகண்டிருப்பர் —ஆனால் அந்தப் புயல் ஓரிடத்தில் தங்கவில்லை, ஒரு நாட்டிலும் ஒய்ந்து இருக்கவில்லை.

இத்தாலி நாட்டுச் சீமான் ஒருவன் மோஸிலிகோ— எனும் பெயருடையான், ப்ரூனோவுக்கு ஒரு அழைப்புக் கடிதம் அனுப்பினன். என் மாளிகையில் வந்து தங்கி இருந்து, என் மகனுக்குத் தத்துவம் கற்றுத்தருக! உமக்கு இங்கு எந்த ஆபத்தும் நேரிடா வண்ணம் நான் பாதுகாப்பளிக்கிறேன், என்று எழுதியிருந்தான். ப்ரூனோ களிப்படைந்தார். என் இத்தாலி அழைக்கிறது! பசுமை நிரம்பிய தோட்டங்கள் என் கண்களுக்கு மீண்டும் விருந்தளிக்கும். என் தாயகத்தில் மீண்டும் உலவலாம். என் உள்ளத்தில் உள்ளதை என் நாட்டவருக்கு உரைத்திடலாம். நல்ல வாய்ப்பு ஈடில்லா இன்பம்! என்றெல்லாம் எண்ணிக் களித்தார். ப்ரூனோவுக்குச் சதிகாரர்களின் இயல்பு தெரியாது. அவர் பண்பு அறிவார், படித்தவர்களின் பழக்க வழக்கமறிவார், சூது பேசும் சதிகாரர்களின் போக்கினை அறியார்.

இத்தாலியில், இனிமைதரும் திராட்சைமட்டுமா இருக்கிறது—எரிமலையுமல்லவா இருக்கிறது! வெசுவயஸ் மட்டுமல்ல, மத அதிபர் இருக்கிறார், எந்த நேரத்திலும் அவர் சாபம் எரிமலை கக்கும் நெருப்பைவிடக் கொடுமையாகக் கிளம்பக்கூடும். நாம் அங்கு செல்வது ஆபத்தாக முடியும், என்று எண்ணத்தான் செய்தார். ஆனால் அந்தச் சூதுக்காரன் அனுப்பிவைத்த கடிதம், அவரை ஏமாற்றி விட்டது. இத்தாலிய நாட்டுச் சீமான்—அவனால் மத அதிபரின் பகையைக்கூட எதிர்த்து நிற்க இயலும்-அந்த மாளிகையைத் தாக்கத் துணிவு பிறக்காது, மத ஆதிக்கக்காரருக்கு, என்று எண்ணினன்.

ஒரு வேளை பகைபட்டுவிட்டது போலும்—ஒரு வேளை நமது கொள்கையை ஆதரிப்போரின் தொகை இத்தாலியில் வளர்ந்துள்ளதுபோலும்—இல்லை என்றால் தன் மகனுக்குத் தத்துவ ஆசிரியராக இருக்கும்படி, ஏன் அந்தச் சீமான் அழைக்கப்போகிறார், என்று எண்ணினாரோ என்னவோ, ஏமாந்துவிட்டார். புற்றருகே அமர இசைந்துவிட்டார்.

வெனிஸ் நகர்! கடலலை தழுவும் கோட்டைச்சுவர் உள்ள அழகிய மாளிகை! ப்ரூனோ அங்கு தங்கி, தமது அருந்திறனை அள்ளி அளித்துவந்தார் சீமான் மகனுக்கு. வெள்ளியை உருக்கிவார்க்கும் நிலவுபோல, அவர் அறிவு புகட்டிவந்தார் வாலிபச் சீமானுக்கு — ஆனால், அவன் மனதிலே அறிவு புகவா செய்தது—அவன் முன் ஏற்பாட்டின்படி, ப்ரூனோ சொன்னதை எல்லாம், மதவிசாரணைக் குழு அலுவலரிடம் ஒவ்வொருநாளும் ஒப்புவித்துக்கொண்டிருந்தான்—குற்றப்பத்திரிகை தயாராகிக்கொண்டிருக்கிறது ப்ரூனோமீது.

"அகண்ட வெளியின் அழகினைக் காண் இளைஞனே! இயற்கையின் எழிலைப் பாரப்பா! என்ன கவர்ச்சி! எவ்வளவு நேர்த்தி! வீசும் காற்று, கீதமாக இல்லையா வாலிபனே, உற்றுக்கேள்! கடலலையைக் கண்டால், எத்துணை மாட்சிமை தெரிகிறது. இந்த இயற்கை அழகைக்கெடுக்க அழுகும் கற்பனைகளை, கட்டுக்கதைகளைக் கட்டிவைத்திருக்கிறார்களே கபடர்கள்" என்றெல்லாம், பாகுமொழியில் பகுத்தறிவைக் கூறி வந்தார் ப்ரூனோ. எப்போதுமே, ப்ரூனோவுக்கு இயற்கை அழகைக்கண்டு களிப்பதிலே அளவற்ற இன்பம். ஆண்டு பலவாக அவர், மாளிகைகளிலே சிற்சில காலம் தங்கிக் கிடந்தாலும், பெரும் பகுதி, நாடு விட்டு நாடு சுற்றித்திரியும் நிலையிலே இருந்ததால், இயற்கையுடன் நெருங்கிய தோழமை பூண்டிட முடிந்தது. சாலைகளில் நடப்பார், சோலைகளில் உலவுவார், குன்றின் மீது ஏறிநின்று, சுற்றிலும் தெரியும் கோலம் கண்டு களிப்பார்! வெனிஸ் மாளிகையின் அமைப்பும், இயற்கை அழகை அவருக்கு அள்ளித் தருவதாக அமைந்திருந்தது. கடலோரம் மாளிகை! (வளரும்)

## ஒரு கேள்வி!

"அண்ணா!"

"தம்பி!"

"இந்தியைப் பலாத்காரமாகத் திணிக்கமாட்டோம் என்று நேரு கூடச்சொல்லிவிட்டாரே அண்ணா!"

"ஆமாம், தம்பி!"

"பிறகு, இந்தியை ஏன் அண்ணா எதிர்க்கவேண்டும், நீங்கள்"

"இப்போதுமட்டுமா? இதுபோல, அடிக்கடி சொல்கிறார், நேரு! ஆனால் நடப்பதோ வேறு!"

"சந்தேகத்தை வளர்த்துக் கொள்ளாமல், கொஞ்சம் நம்பிக்கை வைக்கக்கூடாதா நேரு வார்த்தையில்?"

"ரொம்பசரி தம்பி! நமக்கு நம்பிக்கைவரும் விதமாக ஒரு காரியம் செய்யச் சொல்லேன்"

"என்ன காரியம் அண்ணா?"

"சிறுகாரியம்தான்!"

"சொல்லுங்கள்..."

"இந்தியைப்போல தமிழ், மலையாளம், தெலுங்கு எல்லாவற்றுக்கும் பூரண அந்தஸ்து தருகிறோம் என்று சொல்கிறார்களல்லவா?"

"ஆமாம்! 'கோட்டை'யில் கூடப் பேசினாரே நேரு!!"

"அதற்கு அடையாளமாக, இப்போது தபால்கார்டுகளில் எல்லாம் இந்தியிலேயே இருப்பதைமாற்றி, தமிழ் தெலுங்கு மலையாளத்தில் எழுதச்சொல்லு பார்க்கலாம்..."

"என்னண்ணா!"

"ஏன், தம்பி!"

"இமய முதல் குமரி வரையில் ஒரே விதமாக இருப்பதற்காகத் தானே, இந்தியில் கார்டுகள்?"

"ஆனால், மொழிகள் ஏராளம் உள்ளதே!"

"அத்தனை மொழிகளிருந்தும் அவைகளுடன் நாம் ஒரு தேசமாக இருப்பதுதான் பெருமை—என்று பேசினாரே, நேரு!"

"அதற்காக...!"

"தமிழ் பேசுமிடத்தில் தமிழில் கார்டுகள், தெலுங்கு நாட்டில் தெலுங்கில் கார்டுகள் இப்படி ஒவ்வொரு மொழியிருக்குமிடத்திலும் அந்தந்த மொழியில் வெளியிட்டால் என்ன? அச்சடிக்கமுடியாதா! உத்திரவு போட்டால் நிறைவேறாதா! செலவுதான் அதிகமாகி விடப்போகிறதா! ஏன் தம்பி, பதில் சொல்லவில்லை? பார்க்காதே, என்னைக்கோபத்துடன்! சிந்தி— அப்போது தெரியும், எப்படிப்பட்ட சிலந்தி வலையில் நாம் சிக்கியிருக்கிறோம் என்பது!!

# குழப்பித் தொலையாதீர்!

அப்பப்பா!! தேசியத் தலைவர்கள், மந்திரிகளானதும் ஆனார்கள்—மனம்போன போக்கில் கல்வித் துறையில் செய்யும் சீர்திருத்தங்களுக்குக் கணக்கு! வழக்கில்லை!!

தங்கள் காலத்தில் செய்யப்பட்டது என்று இருக்கவேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு 'புதிய காரியத்தை'ச் செய்ய முயன்று, திண்டாட்டத்தில் தள்ளுகிறார்கள், நம்மை!

செய்யவேண்டிய புதுமைகள் எவ்வளவோ இருக்கிறது, சமூகத்தில்—பாரம்பரியமாக இருந்து வரும் அந்தப் பழமைகளை நீக்கிப் புகழ் பெறுவோமே என்று புறப்படுவதில்லை, 'கனம்'கள்!

எவர் வந்தாலும், இந்தக் கல்வித்துறைதான், கண்ணில் படுகிறது—அது சொள்ளை இது சொட்டை! வெள்ளையன் படிப்பு முறை வேண்டாம்! புதிய மாறுதல் பாரீர்! ஆதாரக் கல்வி இதோ கேளீர்!—இப்படி, அடிக்கடி, ஏதாவதுநிகழ்ந்துகொண்டேயிருக்கிறது, நாட்டில்.

இதனால், கல்விமுறை, ஆண்டுக்காண்டு மாறுகிறது.

ஒரு ஆண்டில், ஒரு மாணவன் இந்திய சரித்திரம் — பூகோளம்—விஞ்ஞானம்—ஆகியவைகளைத் தனித்தனியாகப் படித்துப் பரீட்சை எழுதுவான்!

அடுத்த ஆண்டில், அதே வகுப்புக்கு வரும் இன்னொரு மாணவனுக்கு, பூகோளமோ, சரிதமோ, விஞ்ஞானமோ தனித்தனியாகச் சொல்லிக்கொடுக்கப்படாமல், எல்லாம் சேர்த்து 'ஒரு அவியல்' இருக்கும்! அதற்கு 'சோஷியல் ஸ்டடி' என்னும் பெயரிடப்பட்டிருக்கும்!

இதனால், புத்தகம் போடுபவர்களுக்கு வேட்டையே தவிர, ஆசிரியர்களும் அதைவிட மாணவர்களும் அடையும் அல்லல்—அளவில!

இப்படி மாறுதலைத்தான் செய்கிறார்களே, மந்திரிமார்கள் — அப்படிச் செய்யும்போதாவது, ஆசிரியப் பெருமக்களைக் கலந்தோ, பள்ளிக்கூடப் பேரறிஞர்களிடம் விபரங்கள்பெற்றோ செய்கிறார்களா என்றால், அதுவுமில்லை. 'கனம்' என்று, மந்திரி நாற்காலியில் உட்காருவதாலேயே, உலக மேதையாகிவிட்டோம் என்றொரு பித்துக் குணம் பிறந்துவிடுகிறது!

சரித்திரம் என்பது ஒருமுறை நிகழ்ந்த சம்பவங்களின் தொகுப்பு, எதிர்கால உலகுக்கு ஒரு கண்ணாடி, இப்படிப்பட்ட சரித நூல்களைப் படிப்பதால் மாணவன் மனப்பக்குவம் பெறுகிறான்! சீசர், அலை கடலைத் தாண்டினானுமே—கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர் இந்தியா வரையில் வந்தானுமே என்பதிலிருந்து பற்பல விஷயங்களைக் கற்கிறான். 'இப்படிக் கற்பதால் என்ன பயன்?' என்று கேட்டாராம் மராமத்து மந்திரி இராமநாதபுரம் மாஜி ராஜா! கிரேக்க சரிதம் ரோமாபுரியின் வரலாறு — இதையெல்லாம், இங்கேயிருக்கிற மாணவர்கள், எதற்காகப் படிக்கவேண்டுமோ எனக்குத் தெரியவில்லை, என்றாராம்! நல்லவேளை—படிக்கவேண்டும் என்பதே எதற்காக என்று கேட்காமல், இவைகளை எதற்காகப் படிப்பது என்று கேட்டிருப்பது காண ஒருவகையில் மகிழ்கிறோம்! ஏழைகளுக்கேன் படிப்பு என்று முடிவுசெய்த ஆச்சாரியாரின் மந்திரிசபையில் அங்கம் வகித்தவர் இந்த ஆள்!

"ஆரியமாம்! திராவிடமாம்!! அது ஒரு கலாச்சாரமாம் — இது வேறொரு கலாச்சாரமாம். இப்படியெல்லாம் சரிதஆசிரியர்கள் எழுதிவிட்டுப்போய்விட்டார்கள். இதைப் படிக்கும் நம்முடைய பிள்ளைகளும் நம்பிக் கெட்டுப்போகிறார்கள்" என்று ஒரு முறை ஆச்சாரியாரும், வெகுவாக, நொந்துகொண்டார்! அவரைப்போல நொந்துகொள்ளும் சுபாவத்தினர் பலருண்டு!!

என்ன செய்வது! சரிதம் பேசுகிறதே—அதைக் காட்டியல்லவா, விழிப்புக்கொண்டமக்கள்ஏதேதோ பேசி, வாயை அடைக்கிறார்கள். அதனால், சரிதத்தின் மீதே ஆச்சாரியாருக்கு எரிச்சல் வருகிறது!

இராமநாதபுரம் 'மாஜி'க்கு சரிதம் மீது எரிச்சலில்லை — ஆனால், சரிதம் இப்படித்தானிருக்கவேண்டும் என்கிறார் — வெள்ளையன் வெளியேறுகிறான்! செங்கோட்டையில் கொடி ஏறுகிறது! பண்டிதருக்குப் பராக்குக் கூறுகின்றனர்! பல மாகாணங்களிலும், புதுப்புது மந்திரி பவனிவருகிறார்கள்! அதிலே ஒருவராக இராமநாதபுரம் மாஜி ராஜாவும் இருக்கிறார்! — சரிதம் இப்படியிருந்துவிட்டால், திருப்தி உண்டாகும் போலும், அவருக்கு. கிரேக்க சரிதம், ஏனாம்! ரோமாபுரி அரசியல் எதற்காகவாம்! — கேட்கிறார்கள், பலர். உண்மையில், சீரழிந்துபோன சாம்ராஜ்யங்களின் புழுதிமேடுகளிலே புதைந்தது போக மிஞ்சிய பற்பல அறிவுக் கருவூலங்கள் தான், இன்று உலகையே, உன்னத புரியாக்குகின்றன. அலெக்சாண்டிரியா நகரம் — ஒருபோது, விஞ்ஞானக் கூடாரமாயிருந்தது! ஏதென்ஸ் நகரம், இன்று வளர்ந்திருக்கும் எழுச்சிக் கருத்துக்களுக்கு பிறப்பிடம்! ரோம் — அரசும், சட்டமும் இன்னும் பாராட்டப்படுகின்றன!

ஏதோ, ஒரு எண்ணம் மின்னல் போலத் தோன்றுகிறது — மந்திரிகளுக்கு. பேசியும்விடுகிறார்கள்—சட்டமும் செய்துவிடுகிறார்கள்.

வெள்ளையனின் கல்விமுறை, வெகு சிலாக்கியம்! அதுவே, முடிவு!—எனக் கூறவில்லை, நாம்.

ஆனால், சிலாக்கியமான கல்விமுறையைச் செய்யப்போவதாகச் சொல்லுகின்றவர்கள், அதைவிட மோசமாகவல்லவா, பாடதிட்டங்களையும், படிப்பு முறைகளையும் கெடுக்கிறார்கள்.

பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த படிப்பின் 'தரத்துக்கும்' இப்போதுள்ள படிப்பின் 'தரத்துக்கும்' இடையிலுள்ள தாரதம்யம்—எவருக்கும் புரியும்!

ஆள்பவர்கள் — அதிகாரிகள்—அறிஞர்கள்—அகில உலக மேதைகள் படித்துக் கற்றது பழைய கல்விமுறையில்தான். அப்படிப் படித்ததால்தான், இன்று அவர்கள் அறிஞர்களாகவும் ஆள்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

சரிதம், உலகியல், பொருளியல்—ஏனைய நூலறிவு—எல்லாவற்றையும் இவர்கள் கற்றது ஆங்கில மொழியின் மூலமாகும்.

ஆனால் அந்த மொழியறிவு, படிப்படியாக நமது மாணவர்

களுக்குக் குறைக்கப்பட்டேவந்து இப்போது அடியோடு அழிக்கும் முயற்சியும் நடைபெற்றுவருகிறது.

அப்படி அழிக்க விரும்புவோர், ஆங்கிலத்தின் இடத்தை 'இந்தி'க்கு தரத் துடிக்கிறார்கள்

ஆங்கிலத்தின் வளர்ச்சியால், தமிழுக்கு, ஓரளவு குந்தகம் உண்டாயிற்று என்பது உண்மையே. அது, குந்தகம் ஒன்றைத்தான் செய்தது! ஆனால், இந்தியோ, தாய்மொழிகளின் குரல் வளையையே நெரிக்கத்துடிக்கிறது!

சில ஆண்டுகளுக்கு முன்புவரையில் ஐந்தாவது உயர்நிலை வகுப்பிலே 'விருப்ப பாடம்' என்று ஒன்று இருக்கும் — பௌதிகம், ரசாயனம், கணக்கு, 'டைப்ரைடிங்' குறுக்கெழுத்து, தாவரப்பிரிவு—இப்படி! கல்லூரிக்குச்சென்று கலை பயில்வோருக்கு, வசதியாகவும், செல்லமுடியாதோர் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவும் வசதியாக இருந்தது.

இப்போது அதெல்லாம் விரட்டப்பட்டு, புதுப்புது முறைகள்! புதுமை மலர்ந்துள்ளதா எனின் 'தரம்' குறைவதுதான் தெரிகிறது, 'எங்கும்!

இல்லையென்றால், 'சர்வீஸ் கமிஷன்' நடத்தும் பரீட்சையில்—அக்பர் என்பது ஒரு மலை; ஆபிரிக்கா என்பது இங்கிலாந்தின் தலைநகரம்; ஐசனோவர், ரஷ்யாவின் தலைவர்; அரபுக்கடல், ஆஸ்திரேலியாவுக்கருகில் இருக்கிறது— என்று எழுதுவார்கள்? கமிஷன், இவைகளைப் பிரசுரிக்கும்போது, 'ஹாஸ்யமா' வருகிறது! கண்ணீரல்லவோ, கிளம்புகிறது — எதிர்காலம் எத்தகைய இருட்குகைக்குள் இழுத்துச் செல்லப்படுகிறது, என்பதை நினைக்கும்போது.

சென்னை கவர்னர் பிரகாசா, அந்த ஆபத்தை உணருகிறார். என்று கருதவேண்டி இருக்கிறது.

அவர், அரசின் தலைவர்! ஆயினும் வெளிப்படையாகக் கூறுகிறார், "நான் சர்க்காருடன் சம்பந்தம் வைத்திருப்பவன் என்றாலும், கல்வித்துறையைப் பொறுத்த அளவில், சர்க்காரின் தலையீடுகள் இருக்கக்கூடாது என்பதே என்னுடைய சொந்தக் கருத்து." என்று கூறுகிறார், இப்படிக்கூறும் இவர் இதனை, எதிலும் கையெழுத்து வாங்கும் 'கனம்'களிடமன்றோ கூறி இந்த நிலையை மாற்ற முயல வேண்டும்! ★

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

**[பேராசிரியர் ஸ்ரீ இருதயராஜ்]**

பாஸிஸக் கொள்கையைப் பற்றி முசோலினியைக் கேட்டபொழுது அவர் ஒருமுறை சொன்னார் "எனக்குக் கொள்கை கிடையாது, எனது திட்டம் செயலில்தான் அடங்கியிருக்கிறதே தவிர, வீண் பேச்சு, சொல் அலங்காரத்திலல்ல" என்றார். மற்றொருமுறை "கம்யூனிசம் வெறுங்கொள்கை, பாஸிஸம் செயல்முறைக் கொள்கை, அதைப் பற்றி வியாக்யானம், வீண் சர்ச்சை செய்வதையெல்லாம் விட்டுவிட்டு செயலில் இறங்குவதே பாஸிஸத் திட்டம்" என்று கூறி இருக்கிறார்.

அரசு என்பது தனி ஒரு ஆளைப் போல அதற்கென்று ஒரு விருப்பம் உண்டு, மக்களுடைய விருப்பந்தான் அரசின் விருப்பம் என்று சொல்வதற்கில்லை. இரண்டும் மாறுபட்டும் இருக்கலாம். மக்களுடைய பொது விருப்பம் என்பது வெறுங்கனவு. ஏனெனில் அதைக் கண்டுபிடிப்பதே எளிதல்ல. மக்களாட்சியில் மக்களுடைய முடிவுக்குப் பல சிக்கலான பிரச்சனைகள் விடப்படுகின்றன. ஆனால் அவைகளை அலசிப்பார்த்து, நன்மை தீமைகளை ஆராய்ந்து நல்ல முடிவிற்கு வருவதற்கு பாமர மக்களுக்குப் போதிய ஆற்றல் கிடையாது. மக்களிடம் அதை எதிர்பார்ப்பதும் தவறு. என்றார் முசோலினி.

மக்களுக்குள்ளே சமத்துவம் உண்டென்று நினைப்பதும் அதை நடைமுறையில் நிலைநாட்டுவதும் அறிவீனம். காரணம் மக்களையெல்லாம் ஏதோ ஒரு வார்ப்பிலே இருந்து வார்த்தெடுத்த ஒரே மாதிரியான பொருள்களைப்போல மதிக்கக்கூடாது. புத்திக் கூர்மையிலே செயலாற்றுந் திறனிலே, ஒழுக்கத்திலே பல திறப்பட்டவர்களைக் கொண்டது மனித வர்க்கம்-அவர்களெல்லோரையும் ஒரே மாதிரியாக சமத்துவமாக பாவிப்பது தவறு. அந்தத் தவறைத்தான் ஜனநாயகத்தின் பெயரால் செய்து வருகிறோம் என்று முசோலினி நினைத்தார்.

ஒரு காலத்தில் ரோம சாம்ராஜ்யம் உலகையே ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து ஆண்டது. அந்தப் பொற்காலத்தை மீண்டும் பெறவேண்டும். இத்தாலியின் கீர்த்தி எங்கும் பரவவேண்டும். உள்நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலவவேண்டும் என்பவைகளே முசோலினியின் நோக்கங்கள். இந்த எண்ணங்கள் ஈடேற எத்தனை கஷ்டமும், நஷ்டமும், பெரிதல்ல என்று நினைத்தது பாஸிஸ்ட் கட்சி. இதற்காகப் பலாத்காரம் தேவைப்பட்டாலும் சரி கடுமையான பிரச்சாரம் அவசியமானாலும் சரி மிரட்டல்தான் ஒரே வழி என்றாலும் சரி, எல்லாவற்றிற்கும் தயாராயிருந்தது பாஸிஸ்ட் ஆட்சி.

அரசாங்கத்தைக் குறை கூறினால் குற்றம்; நசுக்கி அழிக்கப்பட்ட எதிர்க்கட்சிக் கொள்கைகளைப் பரப்பினால், அல்லது உள்நாட்டில் இருக்கும் நிலையை மிகைப்படுத்தி, வெளி உலகத்துக்கு இத்தாலியின்மேல் அதனால் அருவருப்பு ஏற்படும்படி செய்தி அனுப்பினால் தேசத் துரோகம் என்று முசோலினி பிரகடனம் செய்தார். பத்திரிகைகளுக்கெல்லாம் ஒரு பார்வையாளர் நியமிக்கப்பட்டு கட்சிக்குக் கசப்பான செய்திகளை வெளியிடாமல் பார்த்துக்கொள்ளப்பட்டது. மீறி அரசாங்கத்தைக் குறை கூறும் பத்திரிகைகளை மூடிவிட்டோ அல்லது அதன் நிர்வாகிகளை அகற்றிவிட்டு, பாஸிஸத்தை அப்படியே பின்பற்றும் "வேண்டியவர்களை" அப் பத்திரிகைகளுக்கு ஆசிரியர்களாக நியமித்தோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஒரு நாட்டிற்கு கீர்த்தியும் இலாபமும் பாதுகாப்பும்கொண்டுவரக் கூடிய ஒருபோரில் மக்கள் மடிந்தாலும், அல்லது நாட்டில் பற்றாக் குறை ஏற்பட்டு மக்கள் அவதிக்குட்பட்டாலும் அதைப் பொருட்

படுத்த வேண்டியதில்லை என்றார் முசோலினி. சமத்துவம், சுதந்தரம், இது போன்ற உரிமைகளைப் பற்றிப் பேசிப் பயனில்லை. அரசு பார்த்து எந்தெந்த உரிமைகளை மக்களுக்கு அளிக்கின்றதோ அந்த உரிமைகளைப்பற்றித்தான் மக்கள் பேசலாம். அரசில் வாழ்ந்து, அரசின் சொற்படி நடந்தால்தான் சுதந்தரத்தைப்பற்றிப் பேசவே இடமேற்படுகிறது, சுதந்தரம் நிலைக்கவும் வழி இருக்கிறது. எனவே தனி மனிதனின் சுதந்தரத்தைப்பற்றி சதா நினைத்துக் கொண்டிருப்பதைவிட, சுதந்தரத்தைத் தந்து அதைக் காப்பாற்றும் அரசுக்கு ஒவ்வொருவரும் தான் செலுத்தவேண்டிய கடமைகள் என்ன என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடுக்குமொழியில் மயங்கிக் கொண்டிருப்பதைவிட, கடமை, கட்டுப்பாடு, தியாகம் என்ற மந்திர மொழிகளையே மக்கள் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும் என்பது முசோலினியின் கொள்கை.

அரசியல் அதிகாரம் தகுதியுடையவர்களின் கையில் இருக்க வேண்டும், அந்தத் தகுதி எல்லோரிடமும் இல்லை. ஒரு சிலரிடம் மட்டும் அதைக் காணலாம், ஆக அதிகாரம் வகிக்க, ஜனநாயகத்தில் காணப்படுவதுபோல், எல்லோரும் பிரியப்படுவதில் அர்த்தமில்லை. யார் வேண்டுமானாலும் ஆட்சியில் பங்கு பெறலாம் என்றிருந்தால் அது திறமையான ஆட்சியாக இருக்கமுடியாது என்று பாஸிஸ்டுகள் நம்பினார்கள்.

தேவைப்பட்டால் பலாத்காரத்தை உபயோகிப்பதால் தவறில்லை என்று பாஸிஸ்டுகளும் எண்ணினார்கள். 1922-ல் ஒரு பெரிய பொது வேலை நிறுத்தம் நடந்து அதை முசோலினி அடக்கிய பொழுது சொன்னார் "பலாத்காரத்தை உபயோகித்து நாற்பத்தெட்டு மணி நேரத்தில் நிலையை சமாளித்துவிட்டோம். இதையே நியாயம்பேசி, புத்திமதிகள் தந்து பிரச்சாரத்தை நம்பி சமாளிக்க முயற்சித்திருந்தால்,நாற்பத்தெட்டு ஆண்டுகள்கூடப் பிடித்திருக்கும். அதனால் தேவைப்பட்டால் அடக்கு முறையை உபயோகித்துத்தான் ஆகவேண்டும்" என்று. ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவன் அடக்கு முறையை வீச, பலாத்காரத்தைத் துணைக்கழைக்கப் பயப்பட்டால் அவன் தகுதியற்றவன், அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாதவன், அமைதியை நிலைநாட்ட முடியாதவன் என்று முசோலினி நினைத்தார்.

சர்வதேச சமாதானப்பேச்சு முசோலினிக்கு அறவே பிடிக்கவில்லை. சர்வதேச சமாதானம் என்பது கோழையின் வீண் கனவு என்றார். சாம்ராஜ்ய எண்ணம் எல்லோருக்குமிருக்கவேண்டும், அது இயற்கை என்றும் சொல்லியிருக்கிறார். இத்தாலியின் பண்டைய சாம்ராஜ்யப் பெருமையை மீண்டும் பெறவேண்டும் என்று விரும்பினார். நாடுபிடிக்கும் வேலையில் ஒன்றும் தவறில்லை. இத்தாலி தன் ஆதிக்கத்தை வெளிநாட்டிலும் பரப்ப வேண்டும். இத்தாலி மக்கள் குடியேறுவதற்கும், வியாபாரச் சந்தைகள் ஏற்படுத்துவதற்கும் அவசியம் மற்ற நாடுகளைப் பிடிக்கவேண்டும் என்று ஏகாதிபத்தியக் கனவு கண்டார். அபிஸீனியா நாட்டை துராக்கிருதமாய் கைப்பற்றவும் செய்தார். நாடு பிடிக்கும் பணியில் மக்கள் ஈடுபட்டிருந்தால், அந்த இலட்சியத்தைக் காட்டியே உள்நாட்டில் மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி, ஆட்சியில் குறைகள் கண்டுபிடிக்கவோ, கலகம் விளைவிக்கவோ முடியாதபடி செய்துவிடலாம் என்று முசோலினி நம்பினார்.

தனிச் சொத்துரிமையை அங்கீகரித்துப் போட்டிப் பொருளாதார முறையை அநுமதித்து, நாட்டில் பொருள் உற்பத்தியைப் பெருக்க நினைத்தார். சொந்தமான சொத்து இருந்தால்தான் உழைக்கவும், சேமிக்கவும் அக்கறை ஏற்படும். போட்டி மனப்பான்மைதான் உற்பத்தியைப் பெருக்கும், ஆனால் இவைகளால், பொது நலம் பாதிக்கப்படாமல் அரசாங்கம் பார்த்துக் கொண்டால் போதும். சுயநலத்தை அநுமதித்தால் ஒவ்வொருவரும் அக்கறையோடு பொருள் உற்பத்தி செய்ய முனைவர். அதனால் நாட்டின் உற்பத்திப் பெருகும். ஆனால் சுயநலம் கட்டுமீறிப் பொதுநலத்துக்குப் பாதகம் விளைவித்தால் அப்பொழுது அரசாங்கம் அதைத் தடைசெய்யும். இதுவே முசோலினியின் பொருளாதாரக் கொள்கை.

பாஸிஸ்டுக் கட்சியாகப் பார்த்து ஒவ்வொரு தொழிலுக்கும் பாஸிஸ்டு யூனியன் என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தியது. இந்த யூனியனில் சேர்ந்த தொழிலாளர்களுக்குத்தான் சலுகைகளெல்லாம்; அதுபோலவே ஒவ்வொரு தொழிலிலும் ஒரு பாஸிஸ்டு முதலாளிகள் சங்கம் இருக்கும். இரு ஸ்தாபனங்களுடைய பிரதிநிதிகளும் அந்த தொழில் பிரச்சனைகளைச் சேர்ந்து கவனித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதில் அரசாங்கம் தலையிடாது. ஆனால் ஒரே ஒரு நிபந்தனைதான். இந்தச் சங்கங்களின் அங்கத்தினர்களெல்லாம், அதாவது, எல்லா தொழிலாளரும் முதலாளிகளும் பாஸிஸ்டுக் கட்சியைச் சேர்ந்திருக்க வேண்டும். இம்மாதிரி தொழில் ஸ்தாபனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே பாஸிஸ்டு சட்டசபை அங்கத்தினர்களாக அநுமதிக்கப்பட்டார்கள். உழைப்பவர்களை, நாட்டுக்கு உயிர்நாடி போன்றவர்களை உண்மையாகப் பிரதிபலிக்கும் சட்டசபை இருக்கும் என்று பாஸிஸ்டுகள் நம்பினார்கள். பொதுஜன வாக்கெடுப்பால் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது நாட்டினுடைய நலனுக்கு, நாட்டில் பெரும் பகுதியான தொழிலாளர் வர்க்கத்துக்கு, சாதகமாக இருக்காது என்பது பாஸிஸ்டுக் கொள்கை.

சர்வாதிகாரத்தில்தான் நாட்டின் அமைதி காப்பாற்றப்படும். ஜனநாயகத்தில் கட்சிக்குக் கட்சி போட்டி, திறமையற்ற ஆட்சி, சுதந்தரத்தைப் போற்றுவதனால் அடங்காமை, அரசுக்குக் கீழ்ப்படியாமை, சட்டத்தை மதிக்காதது ஆகிய அலங்கோலங்கள் காணப்படுகின்றன. எனவே சர்வாதிகாரம் தான் சிறந்த ஆட்சிமுறை, என்பது பாஸிஸத்தின் அடிப்படை நம்பிக்கை.

(தொடரும்)


## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் மேலேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

# காசப்பன் களிப்பும், தேசப்பன் திகைப்பும்,

[அண்ணா]

"சாமி! சாவெள்ளை, தள்ளுவீங்களா!"

"அதென்னப்பா, புதுப் பெயர், சாவெள்ளை!"

"வோட்டு ஒண்ணுக்கு ஒரு ரூபாய் கொடுப்பீங்களான்னுதான் கேட்கிறேன்..."

"வோட்டுக்குப் பணமா?"

* * *

"என்ன நினைத்துக்கொண்டான் என்னை! கூட்டம் கூட்டி, மூலை முடுக்குகளில், கத்திவிட்டால் போதுமா? வாயால் பேசுகிறான், வரட்டுப்பயல்! கொள்கையாம்—ஊருக்கு நன்மை செய்வானும்—திட்டங்களை வேறு அச்சடித்து நீட்டுகிறான் — இதெல்லாமா, தேவை? இதோ, மாற்றிவைத்து விட்டேன், நோட்டுகளை! தேர்தலுக்கு முதலிரவு, தெருவுக்குத் தெருபோய்க் கொஞ்சம் கையை அசைத்தால்—அப்போது தெரியும் அவன் கதை! ஜனநாயகமாவது—கத்தரிக்காயாவது, எல்லாம் காசப்பன் காலம் தம்பி, காசப்பன் காலம்"

* * *

"ஓர் இரவு," நாடகத்திலே, சொர்ணத்தைச் சோகபிம்பமாக்கிய சீமானைப் பார்த்துக் கேட்பான், ஏழை விவசாயி, "டேய்! பணம் தர்ரேன்னு சொல்றே பணத்தைத் தவிர் என்ன இருக்கு உன்னிடம் கொடுக்க!!" என்று. அப்படிக் கேட்கும் உள்ளம், நாட்டில் நெளியும் ஏழை எளியதுகளிடம் அவ்வளவாகப் பரவாத காரணத்தாலும்; வோட்டுப் போட்டால் ஒரு ரூபாயாமே — மாட்டின்மீது கோடு கிழித்தால் போதும், இரண்டுபடி அரிசிக்கு பணம் கிடைக்கிறதே—வீடு ஒன்றில் இருப்பது நாலு வோட்டென்றால் ஒருநாளில் ரூபாய் நாலுவருமே—எனும் எண்ணம், வறுமையின் விளைவால் உண்டாவதாலும், தற்போது நடைபெறும் நகரசபைத் தேர்தலில், பணநாதனின் சப்தம் மிக அதிகமாகக் கேட்கிறது.

பணக்காரர்கள், போட்டிபோடுகின்ற இடங்களிலெல்லாம், ஜெயம் கிடைக்கிறது — சுலபமாக! அவர்களை எதிர்த்துப் போட்டியிடும் ஏழை, எவ்வளவு பெரிய பொது ஜனத்தொண்டனானாலும்எந்நாளும் மக்களுக்காகப் பாடுபடும் ஊழியனானாலும். அவனால் வெற்றியைக் காண முடியவில்லை!

* * *

"ஜம்புநாத முதலியார்தானே? அப்பப்பா! கோவாபரேடிவ் ஸ்டோருக்கு வாயிருந்தால் ஒருதடவை அழுது ஓயுமய்யா, அவ்வளவு, அக்ரமம் செய்திருக்கார்—கோயில்வாகனத்துக்குப் பேச முடிந்தால் அது சொல்லும் கதையைக் கேட்க நமக்கு மனம் பதறிப்போகும் — என்ன செய்றது? காசுக்காரன்! அதனால், ஜெயித்துவிட்டான்!"

*

"பாபம், பரமன்! எவ்வளவு பெரிய உத்தமன் தெரியுமா? நூல் கிடைக்காமல் அல்லாடியபோது சர்க்காரிடம் சண்டைபோட்டு வாங்கிக்கொடுத்தான்! சுதந்திரப் போராட்டத்தின்போது, அவன் வாங்கிய தடியடிகளின் தழும்புகள் இன்னும்—இருக்கிறது, உடலில்!"

* * *

ஒவ்வொரு ஊரிலும்! தேர்தலுக்குப் பிறகு! பேச்சும் பெருமூச்சும் இப்படியே இருக்கும்.

ஆயிரம் குடும்பங்களை அழச்செய்தவனானாலும், அட்டகாசத்துக்குப்பேர்போனவனானாலும், அவனின் கொடுமைக்கு ஆளான பெண்களின் கண்ணீர் பெருகியோடுவது எவ்வளவு தெரியுமா என்று பேசப்பட்டாலும், மக்களை சீச்சீ! நாயே, என்று கருதுபவன் என்றாலும், பொது வாழ்வு என்கிற பெயரால் சிறு துரும்பையும் அசைத்தவனல்ல என்றாலும், அவனால் வெற்றிபெற்றுவிட முடிகிறது—சுலபமாக! ஜே, போடவும் ஆள் கிடைத்துவிடுகிறார்கள். அவனோடு போட்டிபோடுபவன் எவ்வளவு பெரிய பொதுமக்கள் தொண்டனானாலும், அவன் ஏழை என்பதால், எளிதில் தோற்கடிக்கப்படுகிறான்!—எல்லாம், பணநாதன் அருள்தான்!

பணத்தால் விலைபேசும் பழக்கம், மிகமிகக் கேடானது என்பதை எவரும் மறுக்கார்—வாக்குரிமை என்பது ஒரு நாட்டின் வாழ்வை நிர்ணயிக்க மக்கள் பெற்றிருக்கிற சாதனம்! இதனைப் பெற, பல இடங்களிலே, பாரைக் குலுங்கவைக்கும் கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன—பல மன்னர்கள், இந்த உரிமையை மறுத்ததால், சிரத்தையே இழக்க வேண்டியவர்களாகியிருக்கிறார்கள்—மனிதனின் இந்த அடிப்படை உரிமையை மதிக்கும் மனோபாவம் வளர்ந்திருப்பதால்தான் இருபதாம் நூற்றாண்டு ஏற்றம் பெற்றிருக்கிறது — ஜனநாயக காலம், எனப் பேசுகிறோம்—மக்கள் தீர்ப்பய்யா, மக்கள் வழங்கிய தீர்ப்பு! மகேசனே வந்தாலும் மாற்ற முடியாது! என்று கூற முடிகிறது—எனினும், இங்கே, வாக்குரிமை, காசப்பன் ஓசைக்கு வெகு எளிதில் சோரம் போகிறது! மக்கள் மன்றம், வாக்குரிமையையும் ரூபாய் அணா பைசாக்களாகக் கணக்குப்போடுகிறதே ஒழிய, அதன் முக்கியத்துவத்தை அவ்வளவாக இன்னும் அறியவில்லை. காரணம், வெள்ளையன், அவ்வளவு சீக்கிரம் வாக்குரிமையைத் தந்துவிட்டுப் போய்விட்டான்! கேட்காமல் கிடைத்தது

—எனவே, இதன் பெருமையை புரிந்துகொள்ளும் ஆற்றலில்லை, மக்களிடம்! எலெக்ஷன் வருகிற தாமே—நாலு நாளைக்குக் கஷ்டம் இருக்காது — வோட்டு ஒன்றுக்கு ஒரு ரூபாயாவது கிடைக்காதா?—என்று ஏழைக் குடிசைகளில் பேச்சுக் கிளம்பிவிடுகிறது! இப்போது, நடைபெற்றுக்கொண்டிருக்கும் நகர சபைத் தேர்தலில், ஆங்காங்கும் இதுபோன்ற பேச்சுக்களையும் காசோசையின் நிகழ்ச்சிகளையும், காணக்கூடும் தோழர்கள்.

இப்படியொரு, விசித்திரமான நிலை, வெகு வேகமாக வளர்ந்து வருகிறது நாட்டில்! ஏழையர் நாடு என்பதால், இந்த விசித்திரத்தைப் போக்க, என்ன வழி செய்வதென்பது கூட புரியமுடியாத புதிராக இருக்கிறது. சட்டமிருக்கிறது, மக்கள் வாக்கை குறுக்கு வழிகளில் பெறமுயற்சிப்போரைத் தண்டிக்கலாம் என்று—ஆனால், நடைமுறை! சட்டத்துக்கும் நடைமுறைக்கும் ஒத்துவராத நிலை, தேர்தல் ஒன்றில்தானா—எத்தனை எத்தனையோ விவகாரங்களில், பார்க்கிறோமே! பண ஓசை, எதையும் அடக்கி விடுகிறதே!

*

“அட்ஹாக், கமிட்டிக்கு நீதான் முதலில் மனுப்போட்டாய்—மறுக்கவில்லை. காங்கிரசுக்கு எவ்வளவோ தொண்டு செய்திருக்கிறாய், இல்லையென்று சொல்லவில்லை—என்றாலும், எலெக்ஷனில் ஜெயிக்க ஏது பணம் உன்னிடம்? மேட்டூர் மிராசுதார் ரூபாய் பதினாயிரம் எடுத்து வைத்துவிட்டேன் என்று ஆளனுப்பியிருக்கிறார். அவரைத் தேர்ந்தெடுத்தோமேயானால், பணம் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிப்பார்—ஜெயித்தும் விடுவார். காங்கிரசுக்கு ஒரு வெற்றி கிடைக்கும், அப்படி வெற்றிகிடைப்பதை முக்கியமாகக் கருதுகிறாயா? இல்லை, நீ, நிற்கவேண்டியது முக்கியம் என்று நினைக்கிறாயா! காங்கிரஸ் ஜெயிப்பது பெரிதா — இல்லை, கந்தப்பா, நீ ஜெயிப்பது தான் முக்கியம் என்று நினைக்கிறாயா?”

*

காங்கிரஸ் ‘அட்ஹாக்’ கமிட்டி இப்படிக்கேட்டால், கந்தப்பன் என்ன பதில் சொல்லுவான். ஏது, பணம் அவனிடம்? “சரி! சரி!! மேட்டூராருக்கு ஜே! மாட்டுப் பெட்டிக்கு ஜே! ஜே!!”, என்று கூவ ஆரம்பிக்கிறான்.

இப்போது நடைபெறும் நகர சபைத் தேர்தலில், பல இடங்களில் காங்கிரஸ் கமிட்டியினர் இப்படியே, சொன்னார்களாம்.

பணக்காரர்களே, தேவை.

அவர்கள் தான் எவ்வளவு செலவழித்தாவது, ஜெயித்துக் காட்டுவார்கள்.

காங்கிரஸ் வெற்றி பெற்றதாகப் பட்டியல் வரவேண்டும்! அதுதான் முக்கியம்!

அதற்குப் பணக்காரர்களின் ஒத்துழைப்பு தான் வேண்டும். அவர்கள் எப்படிப் பட்டவர்களானாலும் சரி, சேர்த்துக் கொள்கிறோம் காங்கிரசில்.

இதுபோல, ஆங்காங்கும் காரியம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பணக்காரருக்குக் கசக்குமா, காங்கிரசில் சேர? அதிலும், ‘பணம்’ ஒன்றைமட்டும் இது நாள் வரை காட்டி வாழ்ந்தவனுக்கு, சொல்லிக்கொள்ள ‘கட்சி’ ஒன்றும் கிடைக்கிறதே!! அந்தக் கட்சியின், ‘மார்க்கெட் ரேட்’டின் மவுசை எடைபோடத் தெரியாதவர்களா சீமான்கள் — அதோடு, எதிர்க் கட்சிகள்தான் அவர்களை காளான்களாகக் கருதுகிறதே! அதனால், உடனே இடம்பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

ஜே! கோஷம், வானைப்பிளக்க ஆரம்பிக்கிறது.

மாட்டுப் பெட்டிக்கு ஜே! மன்மத நாதருக்கு ஜே! ஜே!!— என்று பெருமையாகப் போடுகின்றன, ஏடுகள்.

ஆனால், இப்படிப்பட்ட போக்கால், காங்கிரஸ் நாட்டுக்கும் பொது வாழ்வுக்கும் செய்கிற மகத்தான தீங்கு இருக்கிறதே, அது கொஞ்சநஞ்சமல்ல. அதனை குறைமதியாளர் தவிர வேறு எவரும் குறைந்தும் மதிப்பிடமாட்டார்கள்.

பணம் இருக்கிறது!—எனும் ஒரே காரணத்தால், ஒரு சாதாரண கதர்ச் சட்டையை மாட்டிவிட்டால், அவனைச் சகலகலா வல்லபன் என்றும், சர்க்கார் இயந்திரத்தை அசைக்க அவனே ஏற்றவன் என்றும், அவனாலேயே சட்டதிட்டங்கள் அமுலாக்கப் படவேண்டுமென்றும், ஒரு முறை வளர்வதை, அறநெறி உணர்ந்தோர், நிச்சயம் அனுமதியார். அந்தப் போக்கு, திருடனிடம் சிக்கிய கன்னியை மீட்டு காமுகனிடம் ஒப்படைத்தது போலவே ஆகும்.

இதனால்தான், நாம் தேர்தல் காலங்களில் காங்கிரசில் சேரும் சீமான்களின் விபரம் வரும்போதெல்லாம், இடித்துரைத்து வருகிறோம். இந்தப்போக்காலேயே காங்கிரஸ் அழிகிறது, என்றும் கூறுகிறார்கள், அரசியல்றிவோர்.

அப்படிக் கூறும்போது, காங்கிரசிலுள்ள நகரக் கமிட்டித் தலைவர்கள் காரியதரிசிகள் ஊழியர்கள் என்போர் நம்மை சுட்டு எரிப்பது போல் சுடுசொற்களையும், ‘சொல்ல வந்தாயோ, எமக்குப்புத்தி?’ எனும் ஆத்திர வார்த்தைகளையும் அள்ளி வீசுவார்கள். அவர்கள் பார்வைக்கு இதோ ஒரு தகவல்.

“சென்ற பொதுத் தேர்தல்களுக்கு காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்குகையில், ஜாதி, பணம் ஆகியவை செல்வாக்கு பெற்றிருந்தன என்றும் பதவிக்கு ஆசைப்பட்டு காங்கிரசில் சேர்ந்த பலர் காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புகார்கள் வந்ததைக் கருத்தில் கொண்டு இந்தத் தடவை அத்தகைய புகார்களுக்கு இடமில்லாமல் செய்ய காங்கிரஸ் தலைமையினர் உறுதி கொண்டுள்ளனர். காங்கிரசில் தீவிர மெம்பராயிருந்து புரிந்த சேவைகள், சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் உள்ள ஒழுக்கம் இவை முக்கியமாகக் கவனிக்கப்படும்”

என்று புது டில்லியிலிருந்து 12-ந் தேதி ‘தினமணி’ நிருபர் தகவல் தருகிறார்.

தலைமையினர், இந்த விஷயத்தை புரிந்து கொண்டதுபற்றி மகிழ்கிறோம்.

## வடக்கும் தெற்கும்

வடநாட்டுத் தலைவர்களைத் தமிழ் நாட்டில் கொண்டாடுவது போலத் தமிழ்நாட்டுத் தலைவர்களை வட நாட்டில் அவ்வளவாகக் கொண்டாடுவதில்லை. நான் வடநாட்டில் சுற்றிப்பார்த்த இடங்களிலெல்லாம் நம் தமிழ்நாட்டுத் தலைவர்களின் படங்களையே காணவில்லை. அதைப் பற்றி மனதுக்குள்ளாகவே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்...

எல்லாபத்திரிகை நிருபர்களுமே நான் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொண்டார்கள் “நீர் சொல்லுவது ரொம்பசரி. இந்தப் பக்கத்தில் தென்னாட்டுத் தலைவர்களை யாரும் நல்லமுறையில் கௌரவப் படுத்தவில்லைதான்” என்று சொன்னார்கள்—அவ்வண்ணம் அக் 2-ந்தேதிய “கல்கி” இதழில், தீட்டப்பட்டிருக்கிறது! ‘பகீரதன்’ எனும் எழுத்தாள நண்பர், பலநிருபர்களுடன் நடத்திய வடஇந்திய சுற்றுப் பயணத்தின்போது, கண்டாராம் இந்தநிலையை—வருத்தத்தோடு தீட்டியிருக்கிறார்!!

நிருபரின் ஆசை வெற்றியாக வேண்டும் விரும்புகிறோம்.

அப்போதுதான் அரசியல் வாழ்வுக்கு ஒரு ஒழுக்கம் நிலை நாட்டப்படும்—நேற்றுவரையில் பகற் கொள்ளையடித்தான், பணம் சேர்த்துவிட்டான், பராக்குக்கூற பலபேர் சேர்ந்துவிட்டார்கள். ஆகவே காங்கிரஸில் சேர், அப்படிப்பட்டவர்களே தேர்தலில் ஜெயிப்பார்கள்.—எனும், நிலையை வளர்ப்பது, அரசியல் வாழ்வுக்கும், எதிர்கால நன்மைக்கும் மிக மிக தீங்குபயப்பதாகும்.

காங்கிரஸ் கட்சி, சரிந்துபோகும் தன் புகழை வெளியுலகுக்குக் காட்ட, தேர்தல் காலங்களில் சதுர்வித உபாயங்களையும் செய்தாவது, வெற்றிப் பட்டியலைக் காட்டவேண்டும் என்று முனைகிறது.

அதனால், எங்கும், காசப்பனே ஓசை செய்கிறான். கண்ணியமும், நாணயமும் மண்ணாகிறது, தேசப்பன் திகைக்கிறான்.

"தேர்தல் என்றாலே இது தான் போலும்", என்று எல்லோரும் கருதும் நிலை, வளர்கிறது. நல்லவர்கள் கூட இந்த நப்பாசைக்குப் பலியாகின்றனர்.

இந்தக் கேடுகளை, ஆங்காங்கும் இப்போது நடைபெறும், நகராட்சி மன்றத் தேர்தல்கள் நன்றாக எடுத்துக்காட்டும்.

சில அரசியல் எதிர்க்கட்சிகள் கூட,..."பணக்காரனே வெற்றிபெற முடியும். பணக்காரன் இருப்பது காங்கிரசில். ஆகவே, காங்கிரசை ஆதரியுங்கள்," என்று சொல்லுமளவுக்கு இருக்கின்றன.

இவைகளை அறியும்போது, உள்ளபடியே மனம் குலுங்கத்தான் செய்யும்—'ஜனநாயகம்' போதிக்கும் கருத்துக்களை அறிவோருக்கு.

மக்கள் தீர்ப்புக்கு மதிப்பும் ஒழுங்கும் வளரச்செய்வது—ஆள்வோரின் நீங்காச்செயல்! ஆகவே, ஆளும் கட்சிக்கு எப்படியாவது பலம் சேர்க்க வேண்டும் எனும் சுபாவம் மாறி பொதுஒழுக்கம் நிலைநாட்டப்பட வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறோம்!!

காங்கிரஸ் மேலிடம் கருதுவதாக தினமணி நிருபர்தரும் செய்தி, சிறிது தெம்பூட்டுகிறது. செய்தி, செயலாகட்டும்! அரசியல் தொண்டர்கள், மக்கள் தூதர்களாகட்டும்! பணநாதர்களின் கொட்டம் அடங்க வழியேற்படட்டும்! ★

# 'மொழிவழி அரசு'

## பிரச்சினையும்-பரிகாரமும்

### வரலாறும்--ஆய்வுரையும்

[ வாணன் ]

இரண்டாண்டுகளில் 38,000 மைல்கள் சுற்றினர்.

9,000 பேர்களை சந்தித்து விவாதித்தனர்.

சுமார் ஒன்றரை லட்சம் தஸ்தாவேஜிகளை பரிசீலித்தனர்.

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அறிக்கைகளை ஆலோசித்தனர்.

இவ்வளவுக்கும் பிறகு, மூவர் அடங்கிய ராஜ்ய புனரமைப்புக் குழு தன் அறிக்கையை இவ்வாரம் வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் நீதிபதி பாசில் அலியின் தலைமையில் ஷீன்சுருவும் பணிக்கரும் சேர்ந்து தயாரித்த ராஜ்ய புனரமைப்பு அறிக்கை மக்கள் மத்தியிலே இன்று வைக்கப்பட்டிருக்கிறது. பல முனைகளிலிருந்து ஆராயப்படவேண்டிய இவ்வறிக்கை, இந்திய உபகண்டத்தின் அதிகார அமைப்பிலே பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த சந்தர்ப்பமளித்திருக்கிறது.

கட்சிக் கணைகளில் சிக்கித் தவிக்கும் காங்கிரஸ்காரர்கள் கம்மிய குரலில் அதிர்ப்தியும், உரத்த குரலில் உற்சாகத்தையும் தெரிவித்து வருகின்றனர்.

கேட்டபடி கிடைத்தோர் உடனே அத்திட்டத்தை அமுலாக்க வேண்டிய அவசியத்தையும், விரும்பியது நடவாதது கண்டோர் வெறுப்புற்றுப் பேசுவதையும் நான்கு நாட்களாக பத்திரிகைகள் நிரப்புகின்றன.

ராஜ்யபுனரமைப்புக் குழுவின் அறிக்கையை ஆராயுமுன், இந்த அறிக்கை தயாரிக்கவேண்டிய அவசியத்திற்கு உண்டான காரணங்களும், வரலாற்று உண்மைகளும் கவனிக்கப்பட வேண்டியவை.

இந்திய உபகண்டம் பல்வேறு தனித்தனி நாடுகளை உள்ளடக்கியது என்பது சரித்திரம் காட்டும் உண்மை.

பாரதம் 56-தேசங்களாகப்பரந்து கிடந்தது. எந்தக் காலத்திலும் ஒரு குடைக்கீழ் இந்த உபகண்டம் இருந்ததில்லை. அவ்வப்போது ஓரிரு அரசர்கள் தங்கள் வாட்பலத்தால் பாரதத்தின் பெரும் பகுதியைத் தங்கள் குடைக்கீழ் கொண்டுவந்தனர். ஆனால் அதுவும் அவர்கள் காலத்தோடு மறைந்தது. அதுவும் விந்தியத்திற்கு வடக்கேதான். நருமதை ஆற்றைத் தாண்டி கங்கைக் கரையோன் எவனும் ஆண்டான் என்ற சரித்திரமே கிடையாது.

ஆரிய நாகரிகம் பரவியிருந்த வடநாட்டிலே வெவ்வேறாகக் கிடந்தன நாடுகள். பஞ்சாப் முதல் வங்கம் வரை தனித்தனி அரசுகளே.

திராவிட நாகரீகம் பரவியிருந்த தென்னாட்டிலே சேர, சோழ, பாண்டியர்களும், பல்லவர்களும்தான் ஆட்சி புரிந்துவந்தனர்.

மத்திய காலத்திலே டெல்லியை படையெடுத்து, ஆட்சிப்பீடமேறிய முகலாயர்கள் வடநாட்டின் பெரும் பகுதியை அடக்கி ஆள ஆரம்பித்தனர். ஆரிய நாகரீகத்திற்கு முற்றிலும் வேறான நாகரீகம் அவர்களை அடக்கியாள ஆரம்பித்தது. தென் மண்டலத்திலே சாளுக்கியர்களும், மராட்டியர்களும் ஓரளவு படையெடுத்தனர்.

தனித்தனி மொழி பேசியவர்களும், கலாச்சார பண்பு கொண்டவர்களும் தங்கள், தங்கள் உரிமைகளை இழந்து கொண்டிருந்த

நேரத்தில் தான் வெள்ளைக்காரன் வியாபாரியாக உள்ளே நுழைந்தான். துண்டு துண்டாக நின்றதோடல்லாமல், கலாச்சாரத் தொடர்பற்றவர்கள் ஆண்டு கொண்டிருந்த காரணத்தால் வெகு சுலபத்தில் ஆங்கில ஆட்சி இந்திய உபகண்டத்தில் நிறுவப்பட்டது. முற்றிலும் வெவ்வேறான மொழியையும், கலாச்சாரத்தையும் கொண்ட இந்திய உபகண்டத்து மக்களைத் துப்பாக்கி முனையிலே ஒன்றுபடுத்தினான். அவனுடைய சௌகரியத்திற்கு ஏற்றவண்ணம் இந்தஉபகண்டத்தைத்துண்டாக்கி மாகாணங்கள் அமைத்தான். அடங்கிப்போகத் தயாரான ஐந்நூறுக்கு மேற்பட்ட சிற்றரசர்களை அநுமதித்து, அவர்களை தனக்கு அடிமைகளாக்கிக் கொண்டான்.

இருநூறு ஆண்டுகள், இந்திய உபகண்டம் வெள்ளையனின் வேட்டைக் காடாக இருந்தது. இலண்டனின் பிரதிநிதி நூறு ஆண்டுகள் அவன் விருப்பப்படி ஆட்சி செய்தான்.

தங்களுடைய மொழியின் வளமும், கலாச்சாரமும் அழிவதைக் கண்டு விழித்துக் கொண்டோர் கூக்குரல் எழுப்பினர்.

நாடு எமது; இதில் எமது மொழி பேசி, எமது மொழியில் எமது கலாச்சாரத்திற்கு ஏற்ற வண்ணம் ஆட்சி செய்ய எங்களுக்கு உரிமை வேண்டும் என்று கூறினர். விடுதலை வேட்கை வளர்ந்தது.

நாட்டின் சுதந்திரத்தைப் பெற அமைக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் இந்த கோரிக்கையை நிறுத்திப் போராட ஆரம்பித்தது. 1905-லேயே மொழி வழி அரசு அமைவதுதான் எங்கள் நோக்கம் என்று காங்கிரஸ் அறிவித்தது.

அறுபதாண்டுகள் போராடி வெள்ளையன் வெளியேற்றப் பட்டான். அடுத்தது மொழிவழி அரசு தானே, என்றனர் பண்புவழி வாழ்வதே சுதந்திரம் பெற்றதற்கு அறிகுறி என்று உணர்ந்தோர்.

வெள்ளையன் கொடுத்த அதிகாரத்திலே அமர்ந்த தேசியத் தலைவர்களுக்கு மொழிவழி அரசும், கலாச்சாரத்திற்கேற்ற அதிகாரப் பிரிவும் கசப்பாக ஆரம்பித்தது.

"வெளிநாட்டான் இந்த நாட்டை அடக்கி ஆண்டபோது, இந்த நாட்டிலிருக்கும் வெவ்வேறு மொழிகளையும், கலாச்சாரத்தையும் அடக்கி அதிகாரம் செலுத்த மாத்திரம் எல்லைக் கோடுகளை போட்டுக் கொண்டது சரிதான்; அந்த அநீதியை எதிர்த்து ஒழித்து, பின் மொழிவழி அரசுகளை அமைக்காமல் இருப்பது நியாயமா? அப்படியானால் வெள்ளையருக்கும்உனக்கும் என்ன வித்தியாசம்?" என்றனர் இழந்த சுதந்திரத்தை திரும்பப் பெற பாடுபட்டவர்கள். இந்தக் கூக்குரல் பல தேசியத் தலைவர்களுக்கு கோபத்தை உண்டாக்கிற்று. பாரத தேசத்திலே பேதம் ஏது என்று புதிய காவடிச்சிந்து பாடினர். சிலர் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் முதலில் ஆகட்டும்; பின்னால் மொழிவழி அரசு பார்க்கலாம் என்றனர். நேரு பண்டிதர் பதட்டமாகப் பேசினார்.

அவருடைய சிஷ்யகோடிகள் தாங்கள் கொடுத்த வாக்கையும், மக்களின் உண்மையான கோரிக்கைகளையும் உணரமறுத்து ஐக்கிய இந்தியாவைப்பற்றிக் கனவுகாண ஆரம்பித்துவிட்டனர். அந்தக் கனவைக் குலைக்க நினைப்பவர்கள் கெடுமதிகொண்டவர் என்று தூற்றிடவும் துணிந்தனர்.

"உலகம் பூராவும் ஒன்றாக வேண்டும்" என்பது மிக உயர்ந்த எண்ணம்தான். ஆனாலும் அவனவனுக்கும் சுதந்திரம் வேண்டுமே? நாட்டுக்கு நாடு; மொழிக்கு மொழி; கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் இருக்கும் பெருத்த வேறுபாடுகள் தனித்தனி நாடுகளை அவசியமாக்குகின்றன என்பதை மனித வரலாறு அறிந்தோர், உணர்வர். இதை உணராமல் வெள்ளைக்காரன் சொகுசான அதிகார பீடம் கொடுத்துவிட்டான், இனிக் கவலை இல்லை என்று, வெள்ளையன் போய் விட்டான்; பாரத புதல்வர்கள் நாங்களே இந்த சிம்மாசனத்தில் அமருகிறோம், பாரீர்!" என்றனர் தேசியத் தோழர்கள்.

அதிகார பீடத்தில் வெள்ளைத் தோலுக்குப் பதில் கருப்புத் தோல் வருவதற்காக மாத்திரம் இத்தனை கஷ்டப் படவில்லை என்பதை மக்கள் உணர்த்த ஆரம்பித்தனர்.

ஐக்கிய கேரளம் கேட்டனர். விசால ஆந்திராவும், சம்யுக்தகர்நாடகமும், மராட்டிய மண்டலமும், விதர்ப்பமும்மகாகோசலமும் கேட்க ஆரம்பித்தனர். அதிகாரத்தை ஏவி, படைகளைக்காட்டி, மிரட்டினர் தேசியத் தலைவர்கள். வெள்ளையனை விரட்டிய வெஞ்சமர் வீரர்கள், தங்கள் உரிமைகளுக்காக உயிர் துறக்கத் துணிந்தனர்.

'ஆந்திரம் பிரியும் வரை உண்ணேன்' என்றுகூறி உயிர்விட்டார் பொட்டி சிராமுலு. தியாகியைச் சாகடித்த பின்னரே எல்லைக்கோடு தீட்டினர் டெல்லியில் சிம்மாசனம் ஏறியோர்.

ஆந்திரம் பூத்தது கண்ட மற்ற மொழியினரும் தங்கள் தங்கள் கோரிக்கைகளை எடுத்துப் பேசி, அதை நிறைவேற்ற வழிகள் தேடினர்.

நிலைமை முற்றியது கண்ட சுதந்திர சர்க்கார், இன்று அறிக்கை வெளியிட்ட கமிட்டியை இரண்டாண்டுகளுக்கு முன் நிறுவினர்.

•

இப்படி, இந்திய உபகண்டத்திலே இருக்கும் பல்வேறு மொழி,

**வெற்றிகரமான 2-வது வாரம்!**

வேலூர் முள்ளிபாளையம் தியேட்டரில்

7 10-'55 வெள்ளி முதல் இரவு 10-க்கு

**எஸ். எஸ். ராசேந்திரன் குழுவினரின்**

**"மணி மகுடம்"**

By

[மு. கருணாநிதி]

நாடகம், தினசரி நடைபெறும்.

கலாச்சார பகுதிகளில் இயற்கையாக வளர்ந்த விடுதலை வேட்கையைத் தணிக்கவே இந்த ராஜ்ய புனரமைப்புக் குழு நியமிக்கப்பட்டது.

இரண்டாண்டுகள்கழித்து இந்தக் குழு வெளியிட்டிருக்கும் ராஜ்ய புனரமைப்புத் திட்டம் எந்தளவு மக்களின் உரிமை வேட்கையைப் பூர்த்தி செய்திருக்கிறது என்பது சிந்திக்க வேண்டிய கட்டத்தில் தான் இருக்கிறது.

"எல்லோருக்கும் திருப்தியான திட்டம் தயாரிக்க முடியாது; பார்க்கப்போனால் நாமெல்லாம் இந்தியர்கள்தானே?" என்று நொண்டி சமாதானம் கூறுவதில் அர்த்தமில்லை. அப்படி பாரதவர்ஷமே ஒன்றுதான் என்று முடிவானால், இந்தக்குழுநியமித்ததிற்கே ஆதாரமில்லை. நாம் மொழி, கலாச்சார வழியாக வேறானவர்கள்தான் என்ற உண்மையை உணர்ந்த காரணத்தால்தான் இந்தக்குழுவே நியமிக்கப்பட்டது. பிறகு அதன் அறிக்கையை அப்படியே ஒத்துக்கொள்ள தேசியத் தோழர்கள் பிரச்சாரம் செய்வதும்: அதில் காணும் முரண்பாடுகளை மறைக்கப் பார்ப்பதும் அரசியல் நேர்மையாகாது.

இந்திய உபகண்டத்திலிருந்த 27 மாகாணங்களை 16 மாகாணங்களாக குறைத்திருக்கிறது, இக்குழு. சில ராஜ்யங்களை புதிதாக உண்டாக்கியும், பல ராஜ்யங்களின் எல்லைக் கோடுகளை மாற்றியுமிருக்கிறார்கள்.

இவைகளை எல்லாம் எந்த அடிப்படையில் செய்திருக்கிறார்கள் என்று சரியான விளக்கம் கிடைக்கவில்லை.

நாஞ்சில் பகுதியைத் தமிழகத்தோடு சேர்த்தவர்கள், பீர்மேடு, தேவிகுளம் தாலுக்காக்களை கேரளத்தோடு சேர்க்கக்காரணம்? இவ்விரண்டு தாலுக்காக்களும் தமிழர் மிகுந்த பகுதிகளானாலும், இவைகள் ஐக்கிய கேரளத்தின் மின்சார உற்பத்திக்கு, தேவையானவை என்கின்றனர், அப்படியானால் மொழிவழி அரசு எங்கே இருக்கிறது?

பம்பாய் மாகாணத்தைப் பெரிதாக்கி, குஜராத்தியும், மகாராஷ்டிரனும் சேர்ந்து வாழத்தான் வேண்டுமென்றால் 1905ல் காங்கிரஸ் கொடுத்த வாக்குறுதி எங்கே சென்றது?

சம்யுக்த மராட்டியம் கேட்டவர்களுக்கு ஏமாற்றமும், விசால ஆந்திரம் கேட்டவர்களுக்கு மறுப்பும்தந்த இக்குழு ஐக்கிய கேரளம் மாத்திரம் அமைக்கக் காரணம்? பஞ்சாபி பேசும் பஞ்சாபையும் ஹிந்தி பேசும் ஹிமாசல் பிரதேசையும் ஒன்றுக்கினால் மொழிவழிஅரசு என்னவாகியது?

நீண்டகாலமாக ஒன்றுகிவிட்ட உத்தரப் பிரதேசத்தைப் பிரிக்க எண்ணமில்லாத குழு, கோவை மாவட்டத்தோடு இணைந்துபோன கொள்ளேகாலம் தாலுகாவை பிரித்து கர்நாடகத்தோடு சேர்க்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?

இப்படி பலப் பிரச்னைகளை எழுப்பிவிட்டிருக்கிறது ராஜ்ய புனரமைப்பு குழுவின் அறிக்கை.

பம்பாய் ஆலை முதலாளிகள், அந்த ராஜ்யத்தை பிளவுபோட்டு மகாராஷ்டிர மாகாணம் அமைப்பதை எதிர்த்தனர் என்றும், உத்தர பிரதேசத்தை பிரிக்க முடியாது என்று பந்த் கூறினார் என்றும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. சிக்கியர்கள் கொட்டத்தை அடக்கவே பஞ்சாபுடன், ஹிமாலயப் பகுதிகள் சேர்க்கப்படுகின்றன என்றும் செய்திகள் வருகின்றன.

தனி மராட்டிய மாகாணத்திற்கு அமைதியாக போராடும்படி காங்கிரஸ் முன்னாள் செயலாளர் சங்கர ராவ்தேவ் கூறுகிறார். மற்றொரு தலைவர் காட்கில் அதை ஆதரிக்கிறார்.

இப்படி அடிப்படை நோக்கம் எங்கிருக்கிறது என்று தெரியாத படி முரண்பாடுகளால் மூடப்பட்டிருக்கிறது இந்த அறிக்கை. தேர்தல் காலத்திற்குள் எப்படியோ மாற்றியமைப்போம் என்று அவசரப்பட்டு ஆதிக்கத்தை பயன்படுத்தி இவ்வறிக்கையைச் செயல் முறையில் கொண்டுவர காங்கிரஸ் எண்ணினால், வருங்காலம் மிகப் பயங்கரமாகும். உரிமைக்கு உயிர் துறக்க எவரும் அஞ்சமாட்டார்கள். பொட்டிசீராமுலுக்கள் நாடெங்கும் ஏற்படுவர். ஆகவே தெளிவும், ஜனநாயகப் பண்போடும் நடக்க தேசியத்தோழர்கள்எண்ணினால் மக்கள் மனதை நன்கு அறிந்து இந்தத்திட்டத்தை அமுலாக்கவேண்டும்.

ஒருமுகமான எல்லைக்கோடுகள் அமைக்க நேருசர்க்கார் எண்ணினால், நாட்டிலே நாலாபக்கத்திலும் உள்ள பல்வேறு கட்சித்தலைவர்களையும், மக்களிடம் செல்வாக்கு வாய்ந்த தலைவர்களையும் கொண்டு ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டலாம். தங்கள் சர்வாதிகார எண்ணத்தை விட்டு, பல்வேறு துறையிலுமுள்ள, மாறுபட்ட கருத்து கொண்டிருக்கும் அரசியல் தலைவர்களையெல்லாம் கூட்டி, இந்த அறிக்கையைத் தீர ஆலோசித்து கூடியவரை எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடியஎல்லைக்கோடுகளைப்போடலாம். அப்படிச்செய்தால்தான் நாட்டின் வருங்காலம் அமைதியோடிருக்கும் என்பது நிச்சயம். அவசரமும், அதிகாரபோதையும் ஆதிக்கப் பாதையில்தான் போகச் சொல்லும். அவ்வழியைப்பின்பற்றினால் நாட்டில் அமைதிகெடும்.

★

3-ம் பக்க தொடர்ச்சி

உபயோகித்து லாபம் அடைய முயன்றாலும் சரி, அவர்களை யெல்லாம் சட்டத்தின் முன் கொண்டு வந்து, தண்டிக்க வேண்டும். அப்படிப்பட்ட துணிவில்லை, அதனாலேயே உயர் இடத்திலிருப்போர் ஊழல்களைச் செய்கிறார்கள் சர்க்காருக்கு, என்கிறார் கிருபளானி. அவர் உரைப்பதை மறுக்க இயலாது காங்கிரசாட்சியை கண்டு வருவோரால்!

அடிக்கடி இதுபோன்ற வழக்குகளில் சிக்கியோராக வரும் விபரங்கள், கீழதிகாரிகளைப் பற்றித்தான் அதிகம் கிடைக்கிறதேயொழிய, 'பெரியவர்'களின், எண்ணிக்கை கிடைப்பதில்லை. அந்தஸ்தும், செல்வாக்கும், அவர்களைக் காப்பாற்றி விடுகிறது! அப்படி நடப்பதை, நம்மைவிட அதிகம் உணரும் வாய்ப்பு பெற்றவர், கிருபளானி — ஆகவேதான், அவரது வார்த்தைகளைக் கவனிக்க வேண்டுகிறோம். மந்திரிமார்களே, விதைக்கிறார்களாம் ஊழல்களை! வேலியே பயிரை மேய்கிறது-ஓணானையும் உடும்பையும் குறை சொல்லி, என்ன பிரசனம், என்கிறார்.

★


## "காவியப் பாவை"

தோழர் முடியரசன் அவர்களின் அருமையான பாடல்கள் அடங்கிய நூல். பாடுவதற்கேற்ற, கருத்துள்ள நல்ல பாடங்கள் உள்ளன. விலை ரூ. 1 முத்து நிலையம்: காரைக்குடி.

*4-ம் பக்க தொடர்ச்சி*

*புரட்டுகள், உள்ளனவோ அவைகளெல்லாம் உதிர்ந்து போய்விட்டன—தத்துவம் மட்டும்தான் மிச்சமாக இருக்கிறது—அந்த தத்துவத்தைக் காட்டி, இந்துமதத்தை ஏற்றுக்கொள்ள என்ன தடை என்று கேட்டிருக்கிறார். என்ன சொல்வார்கள்? என்ன சொன்னான் கதையில்வரும் முரடன்! அது போலத்தான்.*

லெனின்கிராடு *பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் இவரிடம் என்னென்ன கேள்விகளைக் கேட்டனர்—என்ன பதிலளித்தார் என்பதுபற்றி, இந்த வேதாந்தி தம்முடைய* பரோடா *சொற்பொழிவிலே கூறவில்லை.*

**மதம் என்றால், சத்யத்தை, நற்குணத்தை, அழகை நாடிக் கண்டறிவது என்று சொன்னேன்; அந்தப் பேராசிரியர்களும் மாணவர்களும், சரி! சரி! சந்தோஷம்! சந்தோஷம்! இதுதான் மதம் என்றால், அந்தமதத்தை நாங்களும் விரும்புகிறோம் என்று கூறினர் என்று இவர் கூறுகிறார்.**

*பற்கள் இருந்தால், கொடுக்கிற அறையில், பொலபொலவென உதிர்ந்திருக்கும், பற்கள் இல்லை, எனவே அறை விழவில்லை—கதையில்.*

*'பாரதத்தில்' மதம் என்பதன் பெயரால் என்னென்ன இருக்கிறது, எத்தகைய இழிதன்மைகள், கொடுமைகள், மடைமைகள், ஆதிக்கம், என்பதை எல்லாம், காட்டாமல், மதம் என்றால் உண்மையை உணருவது, நற்குணத்தை நாடுவது, அழகை அடைவது என்று கூறினார். கூறவே, இது தானா, மதம், இம்மதம் எமக்கும் சம்மதமே என்றனர், லெனின் கிராடு மக்கள்.*

சத்தியம்—சன்மார்க்கம் — அழிவில்லா அழகு! *இதை யார் இல்லை, என்பர், எவர் வேண்டாமென்பர்! உண்மையை உணரவும், உத்தமனாக வாழவும் வழி வகுப்பதே மதம் என்று கூறுவதை யார் மறுப்பர்!* லெனின் கிராடு *வாசிகளிடம், 'மதம்'—பாரதத்தில், என்னென்ன 'வடிவம்'கொண்டு இருக்கிறது — என்னென்ன நினைப்புகளுக்கு இடமளிக்கிறது, எவ்விதமான நடவடிக்கைகளைச் செய்யச்செய்கிறது, என்பனவற்றை விளக்கி, சித்தரித்துக் காட்டிவிட்டு, இதுதான் மதம், எமது மதம், எமது முன்னோர்கள் காலமுதல், சிதையாமல் இருக்கும் மதம், என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் பேசிவிட்டு, பிறகு, மதம் வேண்டுமா? என்று கேட்டிருந்தால், தெரிந்திருக்கும், வேடிக்கையாகவும் இருந்திருக்கும். பற்களோடு போயிருந்தாலல்லவா, தெரிந்திருக்கும் — கதையில் நாம் கண்ட 'தொடை நடுங்கி' அவன் தான், பற்களை ஏற்கனவே அவனைப் பதியாகக் கொண்டிருந்த பஜாரிக்கு அர்ப்பணித்து விட்டானே.*

*டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றவர்கள், ஊரும் உலகமும் தம்மையும் தமது திறமையையும் மெச்சும்படியாக நடந்துகொள்வதற்காக, அங்கெல்லாம் சென்று, மதமென்றால்,*

அன்பு
அறிவு
உண்மை
பண்பு
அழகு

*என்றெல்லாம், பேசிவிடுகிறார்கள், இங்கு அவர்கள் காண்பது என்ன?*

ஆமை
அனுமான்
வராகம்
காளை

*போன்ற வாகனாதிகளிலே ஏறும்* சாமிகள்!

*அவைகளைச் சுமந்து, 'காப்புக் காய்ச்சிப்போல உடலம் படைத்தவர்கள்! மேலே அமர்ந்து மேனியில் பூசப்பட்டுள்ள சந்தனக் குழம்பை 'விசிறி' ஆறவைக்கும் விப்பிரர்.*

காவடி
மோடி
சூலம்
வீதியில் புரள்வது
வேல்குத்தி ஆடுவது
மொட்டை அடித்துக்கொள்வது
கண்ட குட்டையில் புரள்வது!

*இவைபோன்றவைகள்!*

சத்யம்
சன்மார்க்கம்
அழகு

*லெனின் கிராடிலே இது பேச்*
*இங்கு*

வெண் பொங்கல்
புளியோதரை
தயிரன்னம்
அக்கார வடிசல்

## ஆரியருக்கு

மானியம் விடுவது
காணிக்கை
கொடுப்பது

*திராவிடர் செய்யும் திருப்பணி!*

*கேள்விகள் கேட்டனர் என்கிறார் — பதிலும் அளித்தாராம், சொல்கிறார்.*

*தம்பி, அங்கு என்னென்ன கேள்விகள் கேட்டார்கள் என்பதை அவர் கூறவில்லை. போகட்டும். இங்கு, நீயோ நானோ, கேட்கும் கேள்விகளுக்கு, இவரும் இவர் போன்றாரும் பதில் கூறுவரா, சபிப்பர்.*

*கேட்க வேண்டியது ஒன்றா இரண்டா, ஓராயிரம் உண்டே, எதற்குத்தான் பதிலளிக்க முடியும்.*

*இங்கே உள்ள குப்பை கூளத்தைக் கூட்டிச் சுத்தம்செய்ய முடியவில்லை, அங்கே போனாராம், அற்புதமாகப் பேசினாராம், வெற்றி பெற்றாராம். பளா, பளா,* அடுக்களை நாற்றத்தைக் கழுவாமல் அத்தர் வியாபாரம் செய்யப் போனது போலல்லவா இருக்கிறது.

*அன்பன்,*

**அண்ணாத்துரை.**

---

வரப்பெற்றோம்

**"பட்டமரம்"**

*தோழர் தில்லை. வில்லாளன் M.A. திட்டி, பெண்ணாடம் எழில் நிலையத்தார் வெளியிட்டிருக்கும், இந்நூல் சுவைமிக்க நாவலாகும். ஆசிரியர், 'பட்டமரத்தினை' விவரிப்பதன் மூலம், அரிய கருத்துக்களையும் தருகிறார். விலை ரூ. 1—8—0*

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.